Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, OCTOBER 12 2021

செவ்வாய்க்கிழமை, 12 ஒக்டோபர் 2021 | ஒளி: 07 கதிர் 124 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

# கூரையை பிய்த்தது விலை அதிகரிப்பு




நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு சில அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் சடுதியாக அதிகரிக்கப்பட்டுள்ளன. இதனால், சாதாரண மக்கள் அடுத்தக்கட்டமாக என்ன செய்வதென்று திகைத்துநிற்கின்றனர்.

அப்பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமையால், இதர பொருள்களின் விலைகளையும் வர்த்தகர்கள் சிலர் தாங்கள் நினைத்தாற் போல, அதிகரித்து கொண்டனர். இணைப் பொருள்களின் விலைகள் இன்றும் (12) நாளையும் (13) அதிகரிக்கப்படுமென அந்தந்த சங்கங்களின் சார்பில் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை நேற்றுமுன்தினம் (10) நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டது. எனினும், விலை அதிகரிப்பை சற்று குறைத்து, நேற்று (11) நண்பகல் புதிய திருத்த விலையை அறிவித்துள்ளது.

12.5 கிலோ கிராம் சிலிண்டர், ரூ .1,182 ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்பிரகாரம் புதிய விலை 2, 675 ரூபாயாகும். ஐந்து கிலோ கிராம் சிலிண்டர் 473 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்பிரகாரம் புதிய விலை ரூ.1,071 ஆகும். அத்துடன், 2.3 கிலோ கிராம் சிலிண்டர் 217 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்பிரகாரம் புதிய விலை ரூ.506 ஆகும்.

தொடர்ச்சி P2

## எரிபொருள்களின் விலை கூடுகிறது

எரிபொருள்களின் விலைகள் தற்போது கூடிக்கொண்டே செல்கின்றன என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, நேற்று (11) தெரிவித்தார்.

சில வகையான சலுகைகளை வழங்க வேண்டாம் என்று அமைச்சரவை முடிவு செய்தால், எரிபொருள் விலையை அதிகரிப்பதைத் தவிர இலங்கை பெட்ரோலியம் கூட்டுத்தாபனத்துக்கு (சிபிசி) வேறு வழியில்லை என்றும் அவர் கூறினார்.



தொடர்ச்சி P2

## இந்தியா அழுத்தம் கொடுக்கவில்லை



இந்திய வெளிவிவகார செயலாளரின் இலங்கை விஜயத்தை அடுத்தே மாகாணசபை தேர்தல் தொடர்பான பேச்சுகள் இடம்பெறுவதாக கூறப்படுவதில் எவ்விதமான உண்மையும் இல்லையெனத் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், இந்தியாவின் அழுத்தம் இருப்பதாக கூறுவதிலும் உண்மையில்லை என்றார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று (11) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே,

தொடர்ச்சி P2

## புலம்பெயர் தமிழர் சீனாவை நாடுவதாக இந்தியா கவலை

இலங்கையிலுள்ள தமிழர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற இந்தியா தவறியதையடுத்து புலம்பெயர் தமிழர்கள் சிலர் சீனாவின் உதவியைப்பெற முயற்சிப்பதை அறிந்து இந்திய புலனாய்வுத்துறையினர் தமது கவலையை வெளியிட்டுள்ளதாக த ஹிந்து தெரிவித்துள்ளது.

இலங்கைத் தமிழர்களின் நலன்களைப் பாதுகாப்பதில் இந்தியா தீவிர முயற்சிகள் எதையும் எடுக்கவில்லையென்று புலம்பெயர் தமிழர்கள் கூறியதாக இந்திய புலனாய்வு நிறுவனங்கள், இலண்டனில் அண்மையில் நடைபெற்ற மாநாடொன்றில் தெரிவித்துள்ளன.

தொடர்ச்சி P2

## பிரதான பிரச்சினைகளுக்கு 20ஆவது திருத்தமே அடிப்படை



அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தின் ஊடாக பரவலாக்கப்பட்டிருந்த அதிகாரங்கள், 20ஆவது திருத்தத்தின் ஊடாக நிறைவேற்று அதிகாரத்தை கொண்டவரின் கைகளுக்குள் குவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல, இந்தப் பிரசினைகளுக்கு எல்லாமே 20ஆவது திருத்தமே வழிசமைத்தது என்றார்.

தொடர்ச்சி P2

## உள்ளே

டக்ளஸை தூக்கிவிட்டு சிங்களவரை நியமிக்குக
முழுச் செய்தி P4

## கோட்டாவின் விளையாட்டு அரங்கத்தில் தமிழ் மாயம்

**பிழையைத் திருத்துவார் என மனோ நம்பிக்கை**



இலங்கை இராணுவத்தின் 72ஆவது வருடப் பூர்த்தியையொட்டி, ) அநுராதபுரம் சாலியபுர கஜபா ரெஜிமென்ட் தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்வுகளில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்துகொண்டிருந்தார்.

தொடர்ச்சி P2

## இடிதாங்கி மோசடி ஒன்பது பேர் சிக்கினர்

■ சந்ரு, ரஞ்சித் ராஜபக்ஷ



இடிதாங்கியை 800 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்து, அந்த பணத்தை முதலீடு செய்து, 5 மடங்காக செலுத்துவதாகத் தெரிவித்து ஒப்பந்தம் செய்து, மோசடியில் ஈடுபட்ட 9 பேர், நுவரெலியா பொலிஸாரால் நேற்று முன்தினம் (10) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## கட்டுப்படுத்த முடியாவிடில் இந்த அரசாங்கம் எதற்கு?



எரிவாயு, சீமெந்து, பால்மா போன்ற அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் விருப்பத்துக்கு ஏற்ப வானளாவிய உயரத்துக்கு அதிகரித்துச் செல்லும் போது அதனைக் கட்டுப்படுத்த முடியாது எனச் சொல்லுவதாயின் அரசாங்கம் எதற்கு என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (11) கேள்வி எழுப்பினார்.

தொடர்ச்சி P2

## 'ஆயிரம்' அதிகரிப்புகள் ஆபத்தானவை

கடந்த காலங்களில் 50 அல்லது 100 ரூபாவினால்தான் பொருள்களின் விலைகள் அதிகரித்தன. இந்த அரசாங்கத்தால் ஆயிரக்கணக்கில் அதிகரிக்கப்படுகின்றன இது ஆபத்தான விடயமாகுமெனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க, பொருள்களின் விலை அதிகரிப்பால் மக்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர் என்றார்.

தொடர்ச்சி P2



## வடக்கு மாகாண ஆளுநராக ஜீவன் தியாகராஜா நியமனம

வடக்கு மாகாண ஆளுநராக, தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினர் ஜீவன் தியாகராஜா நியமிக்கப்பட்டார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முன்னிலையில், புதிய ஆளுநராக ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (11) முற்பகல், பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

## பால்மாவும் கசந்தது




துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள இறக்குமதி செய்யப்பட்ட பால்மா, சந்தையில் நேற்று (11) முதல், விநியோகிக்கப்பட்டது.

புதிய விலையில் அந்த பால்மா விற்பனை செய்யப்படும் என இறக்குமதியாளர்கள் சங்க பிரதிநிதி லக்ஷ்மன் வீரசூரிய தெரிவித்துள்ளார்.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் பால்மாவின் புதிய விலை 1,195 ரூபாயாகும். 400 கிராம் பால்மா பக்கெற்றின் புதிய விலை 480 ரூபாயாகும்.

### ஜனாதிபதியும் அமைச்சரவையும்

## சோளக்காட்டு பொம்மைகள்



பால்மா, சீமெந்து, சமையல் எரிவாயுக்கான விலை கட்டுபாடு நீக்கப்பட்டதானது, டொலர் தொடர்பான பிரச்சினையால் அல்ல என தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், டொலர் தொடர்பான பிரச்சனை என்றால் அரிசிக்கான கட்டுபாட்டு விலையை நீக்க வேண்டிய அவசியம் இல்லை என்றார்.

கட்சியின் தலைமையகத்தில் நேற்று (11) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், சிலர் வாயில் வடை சுட்டாலும் இறுதியில் அரிசியின் விலையை தீர்மானித்தது அரிசி ஆலை உரிமையாளர் டட்லி சிறிசேனவே.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# கூரையை பிய்த்தது விலை அதிகரிப்பு

லாஃப் கேஸ் நிறுவனமும் உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்களின் விலையை நேற்று முன்தினம் (10) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் அதிகரித்துள்ளது.

12.5 கிலோ கிராம் சிலிண்டர் 984 ரூபாய் அதிகரித்துள்ளது. அதனையடுத்து, புதிய விலை 2,840 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள 5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் விலை ரூ 393 உயர்த்தப்பட்டு புதிய விலையாக ரூ .1136 அறிவிக்கப்பட்டுள்ளது.

கோதுமை மாவின் விலையை அதிகரிப்பதற்கு தீர்மானித்துள்ள நிறுவனம், ஒருகிலோ கிராம் கோதுமை மாவின் விலையை 10 ரூபாவினால் அதிகரிப்பதற்கு அச்சங்கம் தீர்மானித்துள்ளது.

இதனால் கோதுமை மாவினால் தயாரிக்கப்படும் சகல தின்பண்டங்களின் விலைகளும் அதிகரிக்கும் வாய்ப்புகள் உள்ளனவென தகவல்கள் தெரிவிக்கின்றன.

சீமெந்து மூடையின் விலையை 93 ரூபாவால் அதிகரிக்க சீமெந்து நிறுவனங்கள் முடிவு செய்துள்ளன. அதன்பிரகாரம், 50 கிலோகிராம் சீமெந்து மூடையொன்றின் புதிய விலை 1,098 ரூபாயாகும்.

நாட்டில் பால்மா, சமையல் எரிவாயு, கோதுமை மா, சீமெந்து உள்ளிட்ட பொருள்களின் விலைகள் சடுதியாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து, சாப்பாட்டு பார்சல், கொத்து, தேநீர் உள்ளிட்டவற்றின் விலைகளை அதிகரிக்க அகில இலங்கை உணவக உரிமையாளர் சங்கம் தீர்மானித்துள்ளது.இதன்படி, 10 ரூபாயால் விலையை அதிகரிக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கோதுமை மாவின் விலை அதிகரிப்பை அடுத்து, பேக்கரி உற்பத்தி பொருள்களின் விலை அதிகரிப்பு குறித்து, இன்று பிற்பகல், கலந்துரையாடப்பட உள்ளதாக, பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பெரும்பாலும் ஒரு இறாத்தல் பாணின் விலையை 5 ரூபாயால் அதிகரிப்பது தொடர்பிலும் ஏனைய பேக்கரி பொருள்களின் விலை அதிகரிப்பு தொடர்பிலும், இதன்போது கலந்துரையாடப்படும்.

நுகர்வோரை பாதிக்காத வகையில் இந்த விலை அதிகரிப்பை மேற்கொள்வது குறித்தும் ஆலோசிக்கப்படும் எனவும், அச்சங்கம் கூறியுள்ளது.

# எரிபொருள்களின் விலை கூடுகிறது

மே மாதத்தில் உலக சந்தை விலையின் அடிப்படையில் ஜூன் மாதத்தில் கடைசியாக விலை உயர்வு மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிவித்த அவர், அதன் பின்னர் சர்வதேச ரீதியில் எரிபொருள்களின் விலைகளில் கனிசமாக அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்றார்.

# இந்தியா அழுத்தம் கொடுக்கவில்லை

அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இது தொடர்பான கருத்தாடல்கள் முன்வைக்கப்பட்டதுடன், பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் தமது சந்திப்புகளில் இந்த விடயம் குறித்து வலியுறுத்தி வருகிறார். அதுமாத்திரமின்றி தனிப்பட்ட உறுப்பினராக சட்டவரைபையும் முன்வைத்துள்ளார் என்றார்.

எனவே, தற்போது மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் நாம் முன்னெடுக்கும் செயற்பாடுகள் இந்தியாவின் அழுத்தத்தால் அல்ல என தெரிவித்த அவர், இந்திய வெளிவிவகார செயலாளரின் விஜயமானது இரு நாடுகளுக்குமிடையிலான கலாசார உறவுகள் உள்ளிட்ட வேறு விடயங்களை மையப்படுத்தியதாகவே அமைந்தது என்றார்.

நாம் தொடர்ச்சியாக மாகாணசபைத் தேர்தலை நடத்துவது குறித்து கலந்துரையாடல்களை நடத்தி வருகிறோம் என தெரிவித்த அவர், ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் 3 வருடங்கள் உள்ள நிலையில், அதுவரை மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இருக்க முடியுமா என கேள்வி எழுப்பினார்.

எனவே, இது தொடர்பான முடிவை எடுப்பதற்கு இந்திய வெளிவிவகார செயலாளர் இலங்கைக்கு வர வேண்டிய அவசியம் கிடையாது என்பதால் மாகாண சபைத் தேர்தல் தொடர்பான விடயம் அவரது விஜயத்தில் பேசப்பட்டது என தெரிவிக்கப்படுவதானது, உண்மைக்கு புறம்பான விடயம். அத்துடன், 13ஆவது திருத்தம் மற்றும் மாகாணசபைத் தேர்தல் விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு தொடர்ந்தும் வெளிப்படையாகவே உள்ளது என்றார்.

# 'ஆயிரம்' அதிகரிப்புகள் ஆபத்தானவை

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (11) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

லிட்ரோ கேஸ் நிறுவனம் எரிவாயு சிலிண்டரின் விலையை 1,182 ரூபாவால் அதிகரித்துள்ளது. இவ்வாறு அதிகரிக்கப்பட்டமை இலங்கை வரலாற்றில் முதன்முறையாகும் என்றார்.

இந்த அரசாங்கம் சிந்திக்கலாம், நிறைய பணத்தை அச்சிடலாம்.இதற்கு அழகான கதைகளைச் சொல்ல முடியும். ஆனால் மக்களே சுமைகளை சுமக்க வேண்டியுள்ளது.

பென்டோராவில் பணத்தை வைப்பிலிட்டவர்களுக்கும், அரசாங்க மோசடியில் ஈடுபடுபவர்களுக்கு இது ஒரு பிரச்சனை அல்ல. ஆனால் சாதாரண மக்களுக்கு இது ஒரு பிரச்சிணைக்குரிய விடயம். அரசாங்கத்திற்கு வாக்களித்த மக்களை மேலும் சிரமங்களுக்கு உள்ளாக்கியுள்னர்.

உயரும் வாழ்க்கைச் செலவினால், சாதாரண ஒரு குடும்பத்திற்கு மாதம் எவ்வளவு செலவாகும்? இவ்வாறு உயரும் வாழ்க்கைச் செலவின்படி, 55 ஆயிரம் ரூபாய் அல்ல, பல மடங்காக வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும்.

அரச ஊழியர்களுக்கு சம்பளத்தில் உயர்வு இல்லை.தனியார் துறை ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு இல்லை. தினசரி வருமானம் பெறுபவர்களுக்கு ஊதிய உயர்வு இல்லை. கொடுப்பனவுகள் அதிகரிக்காது சாதாரண குடிமக்களுக்கு என்ன நடக்கும்? வாழ்க்கைச் சுமை தாங்க முடியாதுள்ளது. இது அரசாங்கத்தின் இயலாமையை நிரூபிக்கிறது என்று தெரிவித்த அவர், நாங்கள் இதை வெறுக்கிறோம். கொவிட் தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு பதிலாக, விலைகளை இப்படி அதிகரிக்க அரசாங்கம் அனுமதிக்கிறது எனக் குற்றஞ்சாட்டினார்.

நிதியமைச்சரால் வெளியிடப்பட்ட அனைத்து வர்த்தமானிகளையும் திரும்பப் பெற அமைச்சரவை கடந்த வாரம் அனுமதியளித்தது. சீனிக்கான, அரிசிக்கான மற்றும் டின்மீனுக்கான வர்த்தமானிகள் உட்பட அனைத்து வர்த்தமானிகளும் நீக்கப்பட்டுள்ளன. அமைச்சரவை கூடுவதும் இவ்வாறு வர்த்தமானிகளை மீளப் பெறவே என்றார்.

# இடிதாங்கி மோசடி ஒன்பது பேர் சிக்கினர்

இடிதாங்கியின் புகைப்படத்தை சமூக வலைத்தளங்கள் ஊடாக, வெளியிட்டு இதனை 800 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்ய முடியுமென்றும் இதற்காக முதலில் முதலீடு செய்பவர்கள் 5 மடங்காக சம்பாதிக்கலாம் என பல நபர்களை ஏமாற்றி, பணம் பெற்றுள்ளமை பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நுவரெலியா பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய, நுவரெலியா பொலிஸ் அதிகாரி புத்திக உடுகமசூரியவின் கண்காணிப்பின் கீழ் பல நாள்கள் பின்தொடர்ந்து கண்காணிக்கப்பட்டனர்.

இந்நிலையில், நுவரெலியா-டொப்பெஸ் பிரதேசத்தில் வைத்து 9 சந்தேகநபர்களும் நேற்று முன்தினம் (10) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

**கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை நுவரெலியா நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், பல பொலிஸ் குழுக்களால் இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.**

அவர்களிடமிருந்து 1கோடியே 37 இலட்சம் ரூபாய் பணமும் பலருடன் செய்துகொண்ட ஒப்பந்த பத்திரங்கள், 3 கார்கள் என்பன பொலிஸாரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் 35- 60 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்பதுடன், இவர்கள் கொழும்பு, கண்டி மற்றும் கெக்கிராவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை நுவரெலியா நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், நுவரெலியா சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் வழிநடத்தலின் கீழ், பல பொலிஸ் குழுக்களால் இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# கோட்டாவின் விளையாட்டு அரங்கத்தில் தமிழ் மாயம்

சாலியபுர கஜபா ரெஜிமென்ட் முகாமில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அணிவகுப்பு மைதானத்தைத் திறந்து வைத்து, இராணுவத்தினரிடம் கையளித்தார். "கோட்டாபய ராஜபக்ஷ கிரிக்கெட் மைதானம்" திறக்கப்பட்டதன் பின்னர், இலங்கை அணியின் கிரிக்கெட் வீரர் திசர பெரேராவின் பந்தை ஜனாதிபதி எதிர்கொண்டார்.

அந்த மைதானத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் நினைவுக்கல்லில் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் மட்டுமே விபரங்கள் எழுதப்பட்டுள்ளன. அந்த நினைவுக்கல்லில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் சமூக வலைத்தளங்களில் பல்வேறான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் முன்னாள் தேசிய கலந்துரையாடல்களுக்கான முன்னாள் அமைச்சரும் எம். பியுமான மனோ கணேசன் தனது பேஸ்புக் பக்கத்தில்,

விளையாட்டரங்கமாக இருக்கலாம் விளையாட்டாகவே இருக்கலாம் அன்னை இலங்கையின் பேரில், முதல் பிரஜை, அரசியலமைப்பின் மொழிக்கொள்கையை பின்பற்றனும். அடுத்த மூன்று வருடங்களில் செய்யப்போகும் "பிழைதிருத்தங்களில்" மொழிகொள்கையை பின்பற்றுவதும் ஒன்றாய் இருக்க பிரார்த்திக்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கட்டுப்படுத்த முடியாவிடில் இந்த அரசாங்கம் எதற்கு?

இந்த அரசாங்கத்துக்கு நாட்டை கட்டியெழுப்புவதை விடுத்து குறைந்தபட்சம் பொருளாதாரத்தைக்கூட முகாமைப்படுத்திக் கொள்ள முடியாது என்பதை நன்றாக நிரூபித்துள்ளது என்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற "எதிர்க்கட்சியிலிருந்து மூச்சு' நிகழ்ச்சித் திட்டத்துக்கு ஒருங்கிணைவாக ஆரோக்கியமான நாட்டைக் கட்டியொழுப்பும் நோக்கில் நடைமுறைப்படுத்தும் "ஜன சுவய" கருத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் சமூக நலத்திட்டத்தின் 31 ஆவது கட்டம் நேற்று (11) முன்னெடுக்கப்பட்டது.

இருபது இலட்சம் ரூபாய் பெறுமதி வாய்ந்த அத்தியாவசியமான மருத்துவமனை உபகரணங்கள் தந்திரிமலை பிரதேச மருத்துவமனைக்கு நன்கொடையாக நேற்று (11) வழங்கப்பட்டன. இதில் கலந்து கொண்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இந்த நேரத்தில் மக்கள் எதிர்கொள்ளும் கடுமையான பிரச்சனைகளில் இருந்து மக்களை மீட்டு அவர்களின் அன்றாட வாழ்க்கையை சுமுகமாகப் பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கான திறன் அரசாங்கத்திடம் இல்லையென்றால், அதை ஏற்றுக்கொண்டு உடனடியாக விலகி இந்த நாட்டை கட்டியெழுப்பக்கூடிய குழுவிடம் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும் என்று தான் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மக்களுக்கான அனைத்து வருமான வழிகளும் தடுக்கப்பட்டுள்ளதாகவும், அதே நேரத்தில் நாட்டில் போசாக்குக் குறைபாடு அதிகரித்து வருவதாகவும் மக்கள் ஆதரவற்ற நிலையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# சோளக்காட்டு பொம்மைகள்

ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையில் உள்ள எவருக்கும் அரிசியின் விலையை தீர்மானிக்க முடியாமல் போனது.

எனவே, நெல்லின் விலையையும் அரிசியின் விலையையும் தீர்மானிப்பது அரிசி ஆலை உரிமையாளர்கள் போல், பால்மா, கோதுமை மா என்பவற்றின் விலையையும் தீர்மானிப்பது கம்பனிகாரர்களே என்றார்.

இன்று அரசாங்கமோ, நிர்வாகமோ நாட்டில் இல்லை. இந்த விடயத்தில் இந்த அரசாங்கம் தமது பொறுப்பிலிருந்து விலகியுள்ளது. பொருள்களின் விலையை கம்பனிக்காரர்கள் தீர்மானிப்பார்களாயின் ஜனாதிபதியோ அமைச்சரவையோ நாட்டில் எதற்கு? என கேள்வி எழுப்பிய அவர், ஒரே நாடு ஒரே சட்டம் என ஜனாதிபதி அடிக்கொரு தடவை கூறினாலும் அவ்வாறானதொன்று இந்த மண்ணில் இல்லை.

எனவே இன்று ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையின் கட்டுபாடு இன்றியே அனைத்தும் நடப்பதாக மக்களுக்கு தெரிந்துவிட்டது. எனவே இந்த அரசாங்கமும் ஜனாதிபதியும் வயலிலுள்ள சோளக்காட்டு பொம்மை போல ஆகிவிட்டது என்றார்.

# புலம்பெயர் தமிழர் சீனாவை நாடுவதாக இந்தியா கவலை

சீனர்கள் தம் பிரசன்னத்தை வட இலங்கையில் நிலைநாட்டினால் இலங்கைத் தமிழர்களின் தலைவிதி ஆபத்தாக இருக்கும் என்பதையே மாநாட்டின் மூலம் அறிய முடிந்தது என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் செயலற்ற தன்மையே இலங்கையில் சீனா முக்கியத்துவம் பெற காரணமாக அமைந்தது. இலங்கைத் தமிழர்களுக்கான அரசியல் மற்றும் பொருளாதார தளத்தை உருவாக்குவதற்கு சீன அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவதற்கு மாநாட்டில் முடிவு செய்யப்பட்டதென்று இந்திய புலனாய்வு நிறுவனங்கள் தெரிவித்ததாக அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

வட இலங்கையில் சீனர்கள் எவ்வித தொந்தரவும் இன்றி இருப்பதற்கு அவர்கள் இத்தகைய முயற்சிகளை வரவேற்பார்கள் என்று புலம்பெயர் தமிழர்கள் கருதுகின்றனர். இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டில் அவர்களுக்கு உதவுவதைத்தவிர வேறு வழியில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீன அறிவுஜீவிகளை தமது கருத்துக்களுக்கு சாதகமாக கவர்ந்திழுக்கும் வகையில் இலங்கை புலம்பெயர் தமிழர்கள் உலகலாவிய தம் செல்வாக்கைப் பயன்படுத்துவதாகவும் நம்பப்படுகிறது.

**இந்திய அரசாங்கத்தின் செயலற்ற தன்மையே இலங்கையில் சீனா முக்கியத்துவம் பெற காரணமாக அமைந்தது. இலங்கைத் தமிழர்களுக்கான அரசியல் மற்றும் பொருளாதார தளத்தை உருவாக்குவதற்கு சீன அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவதற்கு மாநாட்டில் முடிவு செய்யப்பட்டதென்று இந்திய புலனாய்வு நிறுவனங்கள் தெரிவித்ததாக அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளது**

# பிரதான பிரச்சினைகளுக்கு 20ஆவது திருத்தமே அடிப்படை

எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (11) இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்

"19 ஆவது திருத்ததின் மூலம் இந் நாட்டு மக்கள் பெற்றுக் கொண்ட அடைவுகளை இந்த அரசாங்கம் மீளப்பெற்றுள்ளதாக ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் கூறினர். இலங்கையில் இடம் பெறும் விடயங்கள் தொடர்பில் எங்களை விடவும் அவர்கள் நன்கு அறிந்து வைத்துள்ளனர்" என்றார்.

19 ஆவது திருத்தம் மூலம் இந் நாட்டின் அதிகாரங்களை பரவலாக்கினோம்.பிரதமர், அமைச்சரவை, பாராளுமன்றம், அரசியலமைப்பு பேரவை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்கள் என்று பரவாலாக்கப்பட்டிருந்தது என்றார்.

பரவலாக்கப்பட்டிருந்த அதிகாரங்களை 20 ஆவது திருத்தம் ஊடாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு வழங்கி வைத்தனர். இன்று நாட்டில் தோன்றியுள்ள பிரச்சிணைகளுக்கு பிரதான அடிப்படைக் காரணம் இதுவே. கூட்டாக இந்த அரசாங்கம் செயற்படுவதில்லை. கூட்டுச்செயற்ப்பாடு இங்கு மிக அவசியம்.

கையெழுத்திட்டுள்ள சர்வதேச சமவாயங்களுக்கு ஏற்ப மனித உரிமைகள் பாதுகாப்பு,சட்டத்தின் ஆட்சியை பாதுகாப்பதற்கு உறுதிபூண்டுள்ளோம் என்றார்.

19 ஆவது திருத்தத்தின் மூலம் சுயாதீன ஆணைக்குழுக்கள் கொண்டுள்ள அதிகாரங்கள் சகலதையும் ஜனாதிபதிக்கு வழங்கியுள்ளனர். மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ,சட்டமா அதிபர், கணக்காய்வாளர்,அரச சேவை அதிகாரிகள் நியமனம் போன்றவற்றில் ஜனாதிபதியின் பரிந்துரைகளுக்கு சவால் விடும் சுதந்திரம் அரசியலமைப்பு பேரவைக்கு இருந்தது. இன்று ஜனாதிபதி அனுப்பும் சகல பெயர்களையும் அங்கீகரிக்க வேண்டிய நிலை அரசியலமைப்பு பேரவைக்கு ஏற்பட்டுள்ளது.பொது ஊழியர்கள் சுதந்திரமாக செயற்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் இறுதியாக சமர்ப்பித்த அறிக்கையில் மனித உரிமை மற்றும் சட்டத்தின் ஆட்சி என்ற பிரிவில் 19 ஆவது திருத்தம் இல்லாமல் ஆக்கப்பட்டதற்காக தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர். ஜனாதிபதி தன் பக்கம் உள்ள பிழைகளை ஏற்றுக் கொண்டு கருத்துத் தெரிவித்துள்ளார். கூட்டுச் செயற்பாடு விடுபட்டமையே இதற்கு பிரதான காரணமாகும். 19 ஆவது திருத்தத்தில் உள்ள கூட்டுச் செயற்பாடுகளை நீக்கியமையே இதற்கு பிரதான காரணமாகும்.

19ஆவது திருத்தத்தை எதிர்க்கட்சியினருடன் கலந்துரையாடி நாங்கள் நிறைவேற்றினோம். ஆனால், 20 ஆவது திருத்தம் கொண்டுவரப்படும் போது எதிர்க்கட்சியினரிடம் ஒரு வார்த்தையேனும் கேட்கவில்லை. நாட்டை இவ்வாறு நிர்வகிக்க முடியாது. கூட்டுச் செயற்பாடு என்பது எதிர்க்கட்சியின் அபிப்பிராயங்களை கோருவதுலும் இருக்கிறது என்றார்.

**19 ஆவது திருத்தம் மூலம் இந் நாட்டின் அதிகாரங்களை பரவலாக்கினோம்.பிரதமர், அமைச்சரவை, பாராளுமன்றம், அரசியலமைப்பு பேரவை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்கள் என்று பரவாலாக்கப்பட்டிருந்தது. 20 ஆவது திருத்தம் கொண்டுவரப்படும் போது எதிர்க்கட்சியினரிடம் ஒரு வார்த்தையேனும் கேட்கவில்லை. நாட்டை இவ்வாறு நிர்வகிக்க முடியாது. கூட்டுச் செயற்பாடு என்பது எதிர்க்கட்சியின் அபிப்பிராயங்களை கோருவதுலும் இருக்கிறது**

துப்பாக்கி முனையில் கைதிக்கு அச்சுறுத்தல்

# 12 வருடங்களுக்குப் பின் நிரபராதி என தீர்ப்பு

## தமிழ் அரசியல் கைதி ஒருவருக்கு விடுதலை

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு 12 வருடங்களாக சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதி ஒருவர் மொனராகலை நீதவான் நீதிமன்றால் நிரபராதி என தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.



அம்பாறை அக்கரைப்பற்று, சின்னப்பனங்காட்டை சேர்ந்த 29 வயதுடைய கதிரவேலு கபிலன், என்பவரே இவ்வாறு ஞாயிற்றுக்கிழமை (10) விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்த நிறைவுக்குப் பின் விடுதலைப் புலிகளுடன் தொடர்பில் இருந்ததாக சந்தேகத்தின் பெயரில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார்.

கடந்த 12 வருடங்களாக அவருக்கெதிராக குற்றப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில், சிரேஸ்ட சட்டத்தரணி பஞ்சாட்சரம், நீதிமன்றில் தர்க்க நியாயங்களை சுட்டிக்காட்டி கபிலனின் விடுதலையை உறுதி செய்யுமாறு மன்றில் முன்வைத்த கோரிக்கையை பரிசீலித்த நீதிமன்றம், குறித்த தமிழ் அரசியல் கைதிக்கெதிராக குற்றத்தை ஒப்புவிக்க போதிய சாட்சியாதாரங்கள் காணப்படாத காரணத்தைக் கூறி அவரை நிரபராதி என விடுதலை செய்துள்ளது.

# கிண்ணியாவில் 9ஏ சித்தி பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு நிகழ்வு



க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் கிண்ணியா வலயத்துக்குள் 9A சித்தி பெற்ற 20 மாணவர்களைக் கௌரவிக்கும் வைபவம் கிண்ணியா பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கிண்ணியா வலயக் கல்வி அலுவலகமும் கலீலா உம்மா பௌண்டேஷனும் இணைந்து இப்பாராட்டு நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வில், கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எ.அனஸ், நகரசபைத் தலைவர் எஸ்.எச்.எம். நளீம், கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் எ. நஸூஹர்கான், கிண்ணியா பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம். றிஷ்வி, நீர் வழங்கல் அமைச்சின் இணைப்புச் செயலாளர் எம்.எப்.ஏ.மரைக்கார் ஆகியோருடன் பாடசாலை அதிபர்கள், சித்தி எய்திய மாணவர்களின் பெற்றோர்கள் எனப் பலரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வுக்கு சமூக சேவையாளர் முஹமட் முஹைடீன் பைஷல் தலைமை தாங்கியதோடு, 9ஏ சித்தி பெற்ற 20 மாணவர்களுக்கு 5000 ரூபா வீதம் சன்மானமும் வழங்கி வைத்தார்.

# கொரோனா கொத்தணி இடம்கொடுக்காதீர்; டிசெம்பரில் கவனம்

கடந்த புதுவருடக் காலத்தில் செயற்பட்டதைபோல, எதிர்வரும் டிசெம்பர் மாதம் செயற்பட்டால் நாட்டில் மற்றொரு கொரோனா வைரஸ் கொத்தணி ஒன்று உருவாகலாம் என சுகாதார தொழில்வல்லுனர்கள் அமைப்பின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.



இதுதொடர்பில் மேலும் தெரிவித்த அவர், கொரோனா வைரஸ் அச்சுறுத்தலில் இருந்து நாடு இன்னும் முழுமையாக விடுபடவில்லை. தற்காலிகமாக கொரோனா வைரஸ் பரவல் குறைவடைந்துள்ளது. எனினும் முன்னர் இனங்காணப்பட்ட கொரோனா வைரஸ் திரிபுகளை விட ஆபத்தான திரிபுகள் சமூகத்தில் இருக்கலாம் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, டிசெம்பர் மாதம் பண்டிக்கைக் காலம் என்பதால் கொரோனா வைரஸ் கொத்தணிகள் ஊருவாகுவதற்கான வாய்ப்புகள் இருப்பதையும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

தமிழ் - சிங்கள புதுவருடக் காலத்தில் செயற்பட்டதுபோல டிசெம்பர் மாதமும் செயற்பட்டால் மற்றொரு கொத்தணி உருவாகி அதனால் ஏற்படும் பாதிப்புக்களை அந்த மாதத்திலேயே உணர முடியும் எனவும் சுகாதார தொழில்வல்லுனர்கள் அமைப்பின் தலைவர் ரவி குமுதேஷ் கூறினார்.

# குடிபோதையில் பொலிஸார் மீது தாக்குதல்

■ ரஸீன் ரஸ்மின்

உடப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கீரியங்கள்ளி பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (10) இரவு இரு குழுக்களுக்கிடையே இடம்பெற்ற மோதலில், இரு பொலிஸார் உள்ளிட்ட நால்வர் வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகி சிலாபம் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



உடப்பு பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களே இவ்வாறு வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

கீரியங்கள்ளி பகுதியில் உள்ள கோழிப் பண்ணை ஒன்றில் ஞாயிற்றுக்கிழமை (10) இரவு சகோதரர்கள் இருவர் உள்ளிட்ட சிலர் மது அருந்திவிட்டு வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளதுடன், பின்னர் அது கைகலப்பாக மாறியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது அங்கிருந்த உறவினர்கள் இருவரை கடுமையாக தாக்கியுள்ள துடன், கூரிய ஆயுதம் ஒன்றினால் வெட்டிக் காயப்படுத்தியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் உடப்பு பொலிஸ் நிலையத்தின் இரவு நேரக் கடமைகளில் ஈடுபட்ட பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்றபோது, அங்கு மதுபோதையில் இருந்த சிலர் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீதும் தாக்குதல் நடத்தியதுடன், இரு பொலிஸ் உத்தியோகத்தர்களை கூரிய ஆயுதத்தாலும் தாக்கியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதனையடுத்து, காயத்துக்குள்ளான இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட நான்கு பேரையும் அங்கிருந்தவர்கள் உடனடியாக சிலாபம் பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

எவ்வாறாயினும், மது அருந்திவிட்டு கைகலப்பில் ஈடுபட்டதாக கூறப்படும் இருவரை கைது செய்துள்ளதாக உடப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது

# தொற்றாளர் எண்ணிக்கை குறைவு

கடந்த வருடத்தின், இக்காலப் பகுதியில் தற்போது இனங்காணப்படும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களைவிட குறைவான தொற்றாளர்களே நாட்டில் இனங்காணப்பட்டனர் என விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.



ஓரிரு நாட்டிகளில் 800 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தாலும், கடந்த வருடம் இதே காலத்தில் தற்போது இனங்காணப்படும் தொற்றாளர்களைவிட குறைந்தளவான தொற்றாளர்களே நாட்டில் இனங்காணப்பட்டனர் என்றார்.

கடந்த ஒக்டோபர் மாதம் உருவான கொரோனா வைரஸ் கொத்தணி இவ்வருடம் ஏப்ரல் மாதம் வரையில் நீடித்திருந்தாலும், நாட்டில் நாளொன்றுக்கு 1000 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அப்போது இனங்காணப்படவில்லை என்றார்.

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுதற்கு முன்னெடுக்கப்பட்ட பல நடவடிக்கைகள் தற்போது இல்லை. இதனால் கடந்த காலங்களைவிட அதிகளவான கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்படுவதற்கான வாய்ப்புகள் உருவாகியுள்ளதாகவும் அவர் இதன்போது கூறினார்.

சுதந்திரக் கட்சியினால்தான்

# 'நாட்டை மீளவும் கட்டியெழுப்ப முடியும்'

மக்கள் இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீதுதான் நம்பிக்கை வைத்துள்ளார்கள். சுதந்திரக் கட்சியினால்தான் நாட்டை மீளவும் கட்டியெழுப்ப முடியும் என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.



முன்னாள் பிரதமர் மறைந்த சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் நினைவு தினத்தை முன்னிட்டு, நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நினைவு தினத்தை முன்னிட்டு, நடைபெற்ற நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சுதேச பொருளாதாரத்தை 70களிலேயே வெற்றிகரமாக செயற்படுத்தியிருந்தால், இன்று இலங்கை சர்வதேசத்துக்கு கடன் வழங்கும் நாடாக வளர்ச்சியடைந்திருக்கும்.

அன்றைய காலக்கட்டத்தில் நாட்டில் சில பொருளாதார சிக்கல்கள் இருந்தமையை ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும். சீனிக்காக, அரிசிக்காக மக்கள் வரிசையில் அன்று காந்திருந்தமை உண்மை தான்.

இருந்தாலும், அன்று அதனை எதிர்த்தவர்கள் கூட தற்போது அவ்வாறான சுதேச பொருளாதாரத் திட்டத்தை வரவேற்றுள்ளார்கள். நாம் அன்று குறைந்தது இரண்டு வருடங்களுக்கேனும் அந்த சிக்கல்களுக்கு முகம் கொடுத்திருந்தால், இன்று இலங்கையில் பொருளாதார சிக்கல் ஒன்றே ஏற்பட்டிருக்காது.

சர்வதேசத்திடமிருந்து கடன் வாங்கும் நாடாக அன்றி, சர்வதேச நாடுகளுக்குக் கடன் கொடுக்கும் நாடாக இலங்கை மாற்றமடைந்திருக்கும் எனவும் தெரிவித்தார்.

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள

# 'ஒரு நாள் சேவைகளை மேலும் விரிவுபடுத்தவும்'

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஒரு நாள் சேவைகளை மேலும் விரிவுபடுத்துமாறு, போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி அதிகாரிகளைப் பணித்துள்ளார்.



மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட முன்னேற்ற மதிப்பாய்வில் கலந்து கொண்ட அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி,வளர்ச்சியடைந்தவரும் யுகத்தில், புதிய தொழில்நுட்பத்தை இதற்காகப் பயன்படுத்தி வேலைகளை துரிதப்படுத்துமாறும்வேண்டிக்கொண்டார்.

இதற்கமைய, அதிக எண்ணிக்கையிலான வாகனப் பதிவுகள், உரிமை கைமாற்றல் மற்றும் சாரதி அனுமதி பத்திரம் வழங்குதல் ஆகியவை ஒரே நாளில் வழங்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி குறிப்பிட்டார்.

தற்போது, ஒருநாள் சாரதி அனுமதி பத்திரம் வழங்கும் சேவை, வேரஹெர, ஹம்பாந்தோட்டை மற்றும் அநுராதபுரம் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் அலுவலகங்களில் மாத்திரமே இடம்பெற்று வருகிறது.

ஒருநாள் வாகன பதிவு சேவை நாரஹேன்பிட்ட, கம்பஹா, அனுராதபுரம், ஹம்பாந்தோட்டை, குருநாகல் மற்றும் யாழ்ப்பாண அலுவலகங்களில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. வெரஹெரா, ஹம்பாந்தோட்டை, அனுராதபுரம், களுத்துறை, கம்பஹா, கண்டி, குருநாகல் மற்றும் மொனராகலை ஆகிய அலுவலகங்களில் மட்டுமே ஒன்லைன் சேவைகள் இடம்பெறுகின்றன.

# எரிவாயு விலை அதிகரிப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டும்!

எரிவாயு விலை இரட்டிப்பாக அதிகரிக்கப்பட்டமையானது பாமர மக்களைக் கடுமையாக பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதால் உடனடியாக இத்தீர்மானத்தை மறுபரிசீலனை செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.



எரிவாயு விலை அதிகரிப்பு தொடர்பிலான தீர்மானம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள செந்தில் தொண்டமான்,

நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் 12.5 கிலோ உள்நாட்டு எரிவாயு சிலிண்டரின் விலையை ரூபா 1,257 ஆல் அதிகரிக்க லிட்ரோ காஸ் நிறுவனம் முடிவு செய்துள்ளது. அதன்படி, பழைய விலை 1493 ரூபாவாகவும், புதிய விலை ரூ .2,750 ஆக உள்ளது. 5 கிலோ சிலிண்டரின் பழைய விலை ரூபாய் 598 ரூபாவாகவும், ரூ .503 ஆல் அதிகரித்து ரூ .1,101 ஆக உயர்ந்துள்ளது. 2.5 கிலோ எரிவாயு சிலிண்டரின் பழைய விலை 289 ரூபாவாகவும், 231 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது.

தற்காலிக ஊழியர் பணி நீக்கம்:

# மட்டு. மாநகர சபை நேற்று செயலிழந்தது

■ வா.கிருஸ்ணா




மட்டக்களப்பு மாநகர சபையில் கடமையாற்றும் தற்காலிக ஊழியர் ஒருவர், மாநகர மேயரால் பணி நீக்கம் செய்யப்பட்டதாகக்கூறி, நேற்று (11) காலை முதல் மட்டக்களப்பு மாநகர சபையின் வாயில் கதவினை மூடி, ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்காரணமாக, மட்டக்களப்பு மாநகர சபையின் செயற்பாடுகள் நேற்று முற்றாகத் தடைப்பட்டதுடன், மாநகர சபையின் உத்தியோகத்தர்களும் உட்செல்ல அனுமதிக்கப்படாத காரணத்தால் மாநகர சபை முற்றாக செயலிழந்தது.

இது தொடர்பில் மட்டக்களப்பு மாநகர சபையின் மேயர் தி.சரவணபவனிடம் கேட்டபோது, "மாநகர சபையின் செயற்பாடு அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதன் காரணமாக, எவரும் வேலை நிறுத்தம் செய்யமுடியாது.

"எனவே, வேலைநிறுத்ததில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், மாநகர சபையின் செயற்பாடுகளை சுமூகமான நிலைக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன" என்றார்.

## நீதிமன்ற அவமதிப்பு வழங்கு ஒத்திவைப்பு

■ வா.கிருஸ்ணா

மட்டக்களப்பு மாநகர சபை மேயரால் மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் மாநகர சபை ஆணையாளருக்கு எதிராக தொடுக்கப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கு, எதிர்வரும் 11ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு, மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில், நீதிபதி எம்.என்.அப்துல்லாவால் நேற்று (11) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, மட்டக்களப்பு மாநகர சபை மேயர் தி.சரவணபவன், மாநகர ஆணையாளர் எம்.தயாபரன் ஆகியோர் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.

01-04-2021 வழங்கிய கட்டளையின் அடிப்படையில் இந்த வழக்கு தொடரப்பட்டது. அதாவது, மாநகர சபையின் 10 அதிகாரங்கள் ஆணையாளருக்கு கையளிப்புச் செய்யப்பட்டிருந்தன.

எனினும், தொடர்ந்து மாநகர சபையின் செயற்பாடுகளுக்கு குந்தகமளிக்கும் வகையில், ஆணையாளர் செயற்பட்டதன் காரணமாக, மாநகர மேயரால் கையளிக்கப்பட்ட அதிகாரங்களை மீளப்பெறுவதற்கான அதிகாரங்களும் காணப்பட்டதன் அடிப்படையில் ஒரு சபை தீர்மானத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட அதிகாரங்கள் மீளப்பெறப்பட்டன.

இந்த அதிகாரங்களை ஆணையாளர் தலையிடக்கூடாது என மேல் நீதிமன்றத்தால் கட்டளை வழங்கப்பட்டிருந்தன.

எனினும், அந்தத் தீர்மானத்தை மீறும் வகையில் மாநகர சபையின் ஆணையாளர் செயற்பட்டதன் காரணமாக நீதிமன்ற அவமதிப்பு வழங்கு தொடரப்பட்டது.

கட்டாக்காலி உரிமையாளர்களுக்கு

## நாள் ஒன்றுக்கு ரூ.5,000 அபராதம்

■ அஸ்லம் எஸ்.மௌலானா

கல்முனை மாநகர சபை ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் தொல்லைகள் அதிகரித்திருப்பதால், அவற்றைக் கைப்பற்றி, உரிமையாளர்களிடம் அபராதம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக மாநகர மேயர் சட்டத்தரணி ஏ.எம். றகீப், நேற்று (11) தெரிவித்தார். இவ்வாறு கைப்பற்றப்படும் ஒவ்வோர் ஆடு அல்லது மாட்டுக்கும் நாள் ஒன்றுக்கு 5,000 ரூபாய் வீதம் அபராதம் அறவிடப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

கல்முனை மாநகர பிரதேசங்களில், குறிப்பாக பிரதான வீதிகள், சந்தைகள், பஸார்கள், பொது இடங்களில் கட்டாக்காலிகளின் தொல்லைகள் மீண்டும் அதிகரித்திருப்பதாகவும் இதனால் வாகன விபத்துகள் இடம்பெறுவதுடன் பயணிகளும் வர்த்தகர்களும் நுகர்வோரும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் மாநகர சபைக்கு தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று வருகின்றன. இது சம்பந்தமாக பல தடவைகள் அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டும், கட்டாக்காலிகளின் உரிமையாளர்கள் பொறுப்புடன் நடந்து கொள்வதாகத் தெரியவில்லை. இதனையடுத்து, மேற்படி அபராத நடவடிக்கையை முன்னெ டுக்குமாறு, மாநகர சபையின் உத்தியோகத்தர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டிருக்கிறது.



மாற்றுவழியை முன்வைத்தால்

## பதவியை துறக்கத் தயார்

### ஹரீஸ் எம்.பி பகிரங்க அறிவிப்பு

■ நூருல் ஹுதா உமர்



தன்னை விமர்சிப்போர் தீர்வுகளுக்கான மாற்றுவழியை முன்வைத்தால், பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறக்கத் தயார் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எச்.எம். எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

20ஆவது அரசியலமைப்புத் திருத்தம் நிறைவேற அவர் அளித்த ஆதரவு குறித்து தற்போது சிலர் முன்வைத்து வரும் விமர்சனங்கள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "அரசாங்கத்துடன் உறவு வைத்துள்ள முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில், பல்வேறு விமர்சனப் பார்வைகளும் அபிப்பிராயங்களும் முன்வைக்கப்படுகின்றன.

"குறிப்பாக, இன்று நான் பின்பற்றும் அரசியல் வழிமுறை பிழையானதெனவும், அரசாங்கத்துடன் உறவு முறையை முறிக்க வேண்டுமெனவும் இவர்கள் கூறுகின்றனர்.

"முஸ்லிம் சமூகத்தின் நலனையே நோக்காகக் கொண்டு நான் பின்பற்றும் அரசியல் வழிமுறைகள், அரசுடனான நல்லுறவு குறித்து விமர்சனங்களை முன்வைப்போர் ஏதுவான மாற்றுவழியை முன்வைக்க வேண்டும்.

"இதன் மூலம், முஸ்லிம் தேசிய பிரச்சினைகளுக்கும் கல்முனை வடக்கு உப பிரதேச செயலக தர முயர்த்தல் தொடர்பில் முஸ்லிம்கள் எதிர் நோக்கும் சவால்களுக்கும் தீர்வு கிடைக்க வேண்டும்.

"மாற்றுவழியை முன்வைக்க விரும்பினால், இதற்கான ஒரு தீர்வுத்திட்டத்தை மார்க்க அறிஞர்கள், முஸ்லிம் புத்தி ஜீவிகள் கொண்டதொரு குழு முன்னிலையில் அதனை முன்வைப்பதுடன், அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவும் வேண்டும்.

"அதனை இக்குழு சரியென ஏற்றுக் கொண்டால், அரசுடனான எனது உறவை விலக்கிக் கொள்வது மட்டுமன்றி, எனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் இராஜினாமாச் செய்யவும் தயாராயுள்ளேன்" என்றார்.

மாடு குறுக்கிட்டமையால்

## ஏறாவூர் நபர் மரணம்; காத்தான்குடி நபர் கைது

■ எச்.எம்.எம்.பர்ஸான்

இம்மாதம் 3ஆம் திகதி விபத்துக்குள்ளான ஏறாவூர் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய நபரொருவர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (10) உயிரிழந்தார்.

இந்த விபத்துத் தொடர்பாக காத்தான்குடியைச் சேர்ந்த ஓட்டோ சாரதியை, ஏறாவூர் பொலிஸார் நேற்று (11) கைது செய்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த ஏறாவூர் நபர், வாகரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதான வீதியில் சென்று கொண்டிருந்த போது, மாடு குறுக்கிட்டமையால் எதிரே வந்த ஓட்டோவில் மோதி விபத்துக்குள்ளாகியதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

# டக்ளஸை தூக்கிவிட்டு சிங்களவரை நியமிக்குக

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்



இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினை தொடர்பில், கடற்றொழில் அமைச்சரும் அரசாங்கமும் மௌனம் காத்து வருவதாகத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், இதற்கு பிரதான காரணம், இந்தியாவுக்கு பயந்துகொண்டு, அவர்கள் முடிவுகளை எடுக்க தயங்குகிறார்கள் எனவும் கூறினார்.

மேலும், இவ்விடயத்தில் மௌனமாக இருப்பதை விட, டக்ளஸ் தேவானந்தா தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்பதுடன், சிங்கள இனத்தைச் சேர்ந்த ஒருவர் கடற்றொழில் அமைச்சராக நியமிக்கப்பட வேண்டும் எனவும், அவர் கூறினார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில், நேற்று (11) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், மீனவர்கள், விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கமும் உரிய அமைச்சுகளும் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளாத நிலையில் விவசாயிகளும் மீனவர்களும் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள்.

சேதன பசளை மூலம் இலங்கையில் உற்பத்தியை மேற்கொள்வதான முயற்சி முழுமையாக தோல்வியடைந்து உள்ளதாகத் தெரிவித்த அவர், விவசாயிகள் தற்போது வீதியில் நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது சேதன பசளையும் இல்லை எனவும் கூறினார்.

இந்நிலையில், விவசாயிகளும் விவசாய அமைப்புகளும் அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்து வருகின்றனர் எனவும், சார்ள்ஸ் நிர்மலநாதன் கூறினார்.

விவசாயிகளுக்கு பசளையை வழங்கி இருந்தால், அரிசி இறக்குமதி செய்ய வேண்டிய தேவை இருந்திருக்காது.

மேலும், 'வட மாகாணத்தைச் சேர்ந்த ஒருவர் கடற்றொழில் அமைச்சராக இருந்தும் கூட, வடமாகாண மீனவர்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டுக் கொண்டே இருக்கும் நிலையில், அவர் மௌனமாக இருப்பதை விட சிங்களவர் ஒருவர் கடற்றொழில் அமைச்சராக இருந்தால், எமது அழுத்தத்தின் காரணமாக ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும்.

கடற்றொழில் அமைச்சின் தற்துணிவு இல்லாத நிலையே, வடபகுதி மீனவர்கள் இந்திய இழுவைப் படகு மூலம் மிகவும் பாதிக்கப்படுகின்றனர் எனவும், சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

காணியை வழங்காது

## இழுத்தடிப்பதாக குற்றச்சாட்டு

■ க. அகரன்

வவுனியா, பரசங்குளம் பகுதியில் அமைந்துள்ள காணியை விவசாயம் செய்வதற்காக ஒவ்வொரு குடும்பங்களுக்கும் பிரித்து வழங்குவதாக, 2014ஆம் ஆண்டு உறுதிமொழி வழங்கப்பட்ட நிலையில், பலவருடங்கள் கடந்தும் அது நிறைவேற்றப்படவில்லை என்று, பரசங்குளம் கிராம அபிவிருத்திசங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக கிராம அபிருத்திச்சங்கத்தினர் கூறுகையில்,

பரசங்குளம் பகுதியில் வசித்துவரும் தமக்கு இந்தப் பகுதியில் அமைந்துள்ள குளத்தின் கீழ் விவசாயம் செய்வதற்காக, ஒரு ஏக்கர் காணி வீதம் வழங்குவதாக வவுனியா வடக்கில் அந்தக் காலப்பகுதியில் பதவியில் இருந்த பிரதேச செயலாளர் உறுதி அளித்திருந்தார்.

அதற்கமைவாக, அந்தப் பகுதியில் அமைந்துள்ள குளம், நிறுவனம் ஒன்றின் உதவியுடன் மக்களின் பூரண ஒத்துழைப்போடு புனரமைக்கப்பட்டது. ஆயினும், குளம் புனரமைக்கப்பட்டு 6 வருடங்கள் கடக்கின்ற நிலையில், தமக்கு வழங்குவதாக சொல்லப்பட்ட விவசாயக்காணி இதுவரை வழங்கப்படவில்லை எனவும் சாடினர்.

குறித்த விடயம் தொடர்பாக காணி ஆணையாளர், பிரதேச செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர்கள் என அனைத்து தரப்பிற்கும் எமது கோரிக்கையை தெரிவித்து வருகின்ற நிலையில், தமது பிரச்சினையை எவரும் தீர்ப்பதற்கு முன்வரவில்லை என்றும், அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

"குறித்த காணி 1975 ஆண்டுக்கு முன்னர் சிலருக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆயினும் அது கைவிடப்பட்ட நிலையில் வனவளத்திணைக்களத்தால் விக்ஸ் மரங்கள் நாட்டப்பட்டு, காடு மீள் உருவாக்கம் செய்யப்பட்டிருந்தது.

"இந்த நிலையில், தற்போது எமக்கு வழங்குவதாக சொல்லப்பட்ட காணியில் வேறு நபர்கள் விவசாயம் செய்துவருவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

"நாம் அன்றாடம் கூலித்தொழிலை நம்பியே வாழ்க்கை நடத்தி வருவதுடன், தற்போது கால் ஏக்கர் காணிகளிலேயே வசித்து வருகின்றோம். எனவே, விவசாய காணி எமக்கு வழங்கப்படும் பட்சத்தில், எமது வாழ்வாதாரத்தை கொண்டு செல்ல முடியும். அதிகாரிகள் எமது பிரச்சினையை விரைவாக தீர்ப்பதற்கு முன்வரவேண்டும். இல்லையேல், குறித்த காணி எமக்கு வழங்கப்படாது என்று எழுத்துமூலமாக தெரிவிக்க வேண்டும்" என்று கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

புனிதநகரில்

## இரவிரவாக வாள்வெட்டு; மூவர் படுகாயம்

■ எஸ் தில்லைநாதன்

பருத்தித்துறை, கற்கோவளம், புனிதநகர் பகுதியில், நேற்று முன்தினம் (10) பிற்பகல் 02 மணியில் இருந்து இரவிரவாக வாள்வெட்டுக் குழுக்களால் பெரும் அட்டகாசம் செய்யப்பட்டுள்ளது.

இதில், மூவர் வாள்வெட்டுக்கு இலக்காகி, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், ஐந்து வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளதுடன், பல இலட்சம் ரூபாய் பெறுமதியான சொத்துகளும் நாசம் செய்யப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் பிற்பகல், கற்கோவளம் - புனிதநகர் பகுதியில், போதையில் ஒருசிலர் சண்டித்தனத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் அப்பகுதியில் உள்ள ஒருசிலர், குறித்த நபர்களை தமது வீட்டுக்கு முன்னால் நின்று சத்தம் போட வேண்டாம் என்று தெரிவித்ததை அடுத்து, குறித்த நபர்கள் பிற இடங்களில் இருந்தும் அவ்வூரில் இருந்தும் வாள் வெட்டு குழுக்களை அழைத்து, அப்பகுதியில் உள்ள ஐந்து வீடுகள் மீது தாக்குதல் மேற்கொண்டதுடன், அவ்வீடுகளில் இருந்த மோட்டார் சைக்கிள்கள் உட்பட பெறுமதியான பொருள்களையும் சேதமாக்கியுள்ளனர்.

இதையடுத்து. இச்சம்பவம் தொடர்பில் இதுவரை மூவர், பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர், அத்துடன், அப்பகுதிக்கு பொலிஸ் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இராணுவம், விசேட அதிரடிப்படை குவிக்கப்பட்டே, வாள்வெட்டு குழுக்களின் அட்டகாகம் அடக்கப்பட்டது.

வடக்கு சுகாதார சேவைகள் பணிமனையை

## முற்றுகையிட்ட பணியாளர்கள்

■ என்.ராஜ்



தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி, நேற்று (11), வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையை முற்றுகையிட்டு, சுகாதார பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த இரண்டு வருடங்களாக தற்காலிக சுகாதார உதவியாளராக யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிய 62 பேருக்கு, சுகாதார அமைச்சின் நிரந்தர நியமனக் கடிதங்கள் சில தினங்களுக்கு முன்பு வழங்கியமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே, இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று நண்பகல் 12 மணியளவில் ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக இருந்து பேரணியாக சென்ற சுகாதார பணியாளர்கள், பண்ணையில் உள்ள வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையை சென்றடைந்து, அங்கு முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் தற்போது பொறுப்பான அதிகாரிகள் இல்லை என்றும் அதேநேரம் பிறிதொரு தினத்தில் அதிகாரிகளை சந்திப்பதற்கு ஒழுங்கு செய்து தருவதாகவும் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் தெரிவித்தார்.

# மீண்டும் முடக்கத்துக்கு வழிசமைத்து விடாதீர்கள்

## திகாம்பரம் எம்.பி வேண்டுகோள்

துவாரக்ஸன்



இந்துக்களின் தீபாவளிப் பண்டிகை அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரவுள்ள நேரத்தில், பொது மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல் அஜாக்கிரதையாக இருந்தால், நாடு மீண்டும் முடக்கப்படும் நிலை உருவாகலாம் என்பதை உணர்ந்து விழிப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமது அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, நகர்ப்புறங்களில் வேலை செய்து வந்த இளைஞர்கள் மலையகத்திலிருந்து இப்போதுதான் மீண்டும் வேலைக்கு செல்லத் தொடங்கியுள்ளார்கள். அவர்கள் தொழில் செய்து தான் தமது குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டிய நிலையில் உள்ளார்கள். இந்நிலையில், கொரோனா முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டதாக எண்ணி விடாமல், பொது மக்கள் தொடர்ந்து சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடக்க வேண்டியது அவசியமாகும். அஜாக்கிரதையாக நடந்து கொள்ளும் போது மீண்டும் நாடு முடக்கப்படும் சூழ்நிலை உருவாகலாம். கடந்த ஆண்டு எந்தவொரு பண்டிகையையும் மக்கள் கொண்டாட முடியாமல் இருந்தது. இன்று நாடு வழமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் போது இந்துக்களின் தீபாவளிப் பண்டிகை வரவுள்ளது.

எனவே, பொது மக்கள் குறிப்பாக பெருந்தோட்ட மக்கள் மிகவும் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும். அனாவசியமாக நகரங்களுக்கு வருவதை தவிர்த்துக் கொள்ளவதோடு, முகக் கவசம் அணிவதில் கவனம் செலுத்தும் போது தம்மையும் சமூகத்தையும் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பதை உணர்ந்து சிந்தித்து செயற்பட வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

### கழிவகற்றலில் அசமந்தமாக செயற்படுபவர்களுக்கு

# எதிராக சட்டநடவடிக்கை



மஹேஸ் கீர்த்திரத்ன

கழிவுகளை சுற்றாடலுக்கு விடுவிக்கும் மாத்தளை நகர வர்த்தக நிலையங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு எதிராக, சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும் என, மாத்தளை மாவட்ட செயலாளர் எஸ்.எம்.பீ.கே. பெரேரா தெரிவித்துள்ளார்.

மாத்தளை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற “ஆறுகளைப் பாதுகாப்போம்“ வேலைத்திட்டத்தின் கீழ், இக்கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது மேலும் தெரிவித்த செயலாளர், நகரில் விடுவிக்கப்படும் கழிவுகள் ஆற்றில் கலப்பதால் நீர் மாசடைவதாகவும் இதனால் நீரை சுத்தமாக்கி ஆறுகளுக்கு விடும் நடவடிக்கையின் தேவை ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் கழிவுகள் நீரில் கலப்பதால் மக்கள் பல்வேறு நோய்களுக்கு உள்ளாவதாகவும் எனவே அசுத்தமடையும் நீரை சுத்தப்படுத்துவதற்காக அரசாங்காத்தால் பாரிய நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாகவும் தெரிவித்தார்.

# 50 அடி பள்ளத்தில் பாய்ந்த கெப்

கே.சுந்தரலிங்கம்

ஹட்டன்- டிக்கோயா பிரதான வீதியின் அலுத்கம பகுதியில், கெப்ரக வாகனம் ஒன்று சுமார் 50 அடி பள்ளத்தில் பாய்ந்து, ஓடையில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு (10)இடம்பெற்றுள்ளது.

ஹட்டன் பகுதியிலிருந்து நோர்வூட் பகுதியை நோக்கி சென்று கொண்டிருந்த கெப் வண்டியே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்தில் சாரதியும் மற்றுமொருவரும் காயமடைந்துள்ளதாகவும், வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்ததன் காரணமாக, இந்த விபத்து நிகழ்ந்துள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.



### ஹட்டன், டிக்கோயா நகரங்களில்

# ‘காலாவதி’ தவழ்கிறது

சுதத்.எச்.எம்.ஹேவா

ஹட்டன் மற்றும் டிக்கோயா நகரங்களில் உள்ள சில வர்த்தக நிலையங்களில் காலாவதியான உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதாக, நுகர்வோர் குற்றஞ்சுமத்துகின்றனர்.

குறிப்பாக காலாவதியான பிஸ்கட், சொக்கலேட், பட்டர், யோகட் உள்ளிட்ட பொருள்கள் காலாவதியான பின்னர் விற்பனை செய்யப்படுவதாகவும் இவ்வாறான பொருள்களை மாற்றுவதற்காக குறித்த வர்த்தக நிலையங்களுக்கு மீண்டும் செல்லும் போது, வர்த்தக நிலைய உரிமையாளர்கள் அவற்றை பொறுப்பேற்க மறுப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில், ஹட்டன்-டிக்கோயா நகரசபையின் பொது சுகாதார பரிசோதகர் ஏ. பாலச்சந்திரனிடம் வினவியபோது, கடந்த சில நாள்களாக நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டிருந்ததால், காலாவதியான பொருள்கள் வர்த்தக நிலையங்களில் காணப்படுவதாகவும் அவற்றை அப்புறப்படுத்துமாறு, உரிமையாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

எனவே உத்தரவை மீறி, இவ்வாறான பொருள்களை விற்பனை செய்பவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.







# நிவாரணப் பொருள்கள் கையளிப்பு

கொரோனாவினால் வருமானத்தை இழந்த, அக்கரப்பத்தனை –மோர்ஷன் தோட்டத்தில் 90 குடும்பங்களுக்கும்,ஆக்ரோ தோட்டத்தில் இருபது குடும்பங்களுக்குமான உலர் உணவு பொருட்கள் மலையக மக்கள் முன்னணி தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வே.ராதாகிருஸ்ணன் தலைமையில் கையளிக்கப்பட்டன. (நீலமேகம் பிரசாந்த்)

### நுவரெலியா பிரதேசசபையின் பட்ஜெட்

# மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

ஆ.ரமேஸ்

நுவரெலியா பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்காண வரவு -செலவு திட்டம், 20 மேலதிக வாக்குகளால் ஏகமானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வாத விவாதங்கள் இன்றி நிறைவேற்றப்பட்டது.

நுவரெலியா பிரதேச சபையின் மாதாந்த அமர்வு சபை தவிசாளர் வேலு யோகராஜ் தலைமையில், நேற்று (11) காலை ஆரம்பமானது.

இதன்போது, தவிசாளரால் சமர்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்ட அறிக்கை தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய சிறுசிறு திருத்தங்கள் சுட்டிக்காட்டப்பட்டு, சபை உறுப்பினர்கள் இதற்கு ஆதரவாக வாழ்த்துக்களையும், தமது ஆதரவினையும் தனித்தனியாக தெரிவித்தனர்.

இந்த நிலையில், சபைக்கு சமூகமளித்திருந்த உறுப்பினர்களில் எதிர் கட்சியான ஐ.தே.க உறுப்பினர் சி.பி.எம்.உயங்கொட வரவு- செலவு திட்டத்திற்கு எதிராக வாக்களித்த போதும்,ஆளும்,எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 20 பேரின் மேலதிக வாக்குகளால் வரவு-செலவு திட்டம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் இது நுவரெலியா பிரதேச சபையின் தவிசாளர் வேலு யோகராஜின் தலைமையிலான, நான்காவது வரவு செலவு திட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.



### பொருள்களின் விலை அதிகரிப்பானது

# விழுந்தவனை மாடேறிய கதை

## வடிவேல் சுரேஸ் எம்.பி தெரிவிப்பு

அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பானது, மரத்திலிருந்து விழுந்தவனை மாடேறிய கதையாகும் என பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர்,

ஒரு பக்கம் வேலையின் அளவு அதிகரிக்கப்பட்டு, தோட்டத் தொழிலாளர்களின் வேலைநாள்கள் குறைக்கப்பட்டிருக்கிறன. உழைப்புக்கேற்ற ஊதியம் இல்லை. மறுபக்கம் வானை முட்டும் அளவு பொருள்களின் விலையேற்றம் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. முறையான ஊதியம் இல்லை சலுகை விலையில் அத்தியாவசிய பொருட்களும் இல்லை.

இதன் விளைவாக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் சிரமத்தின் மத்தியில் அன்றாட வாழ்க்கையை நடத்திச் செல்லும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

கல்வியில் முன்னேறிக் கொண்டிருக்கும் மலையக மக்கள் வாழ்வாதார ரீதியில், பின்னடைவை எதிர்நோக்குவது கவலைக்குரிய விடயமாகும்.

மேலும் கொரோனா நோய்த் தொற்றின் விளைவாக சரியான வேலை வாய்ப்புக்கள் இன்றி, போதிய ஊதியம் இல்லாத இத்தகைய சூழ்நிலையில் இந்த பொருள்களின் விலை அதிகரிப்பானது, ஒட்டுமொத்த இலங்கை மக்களையும் சிரமத்திற்கு உள்ளாகி உள்ளது என்றார்.

### தொடர் மழையால் மலையகத்தில்

# நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டன

எஸ்.கணேசன், மொஹமட் ஆஸிக்

நேற்றுமுன்தினம் (10) இரவு தொடக்கம் நுவரெலியா மாவட்டத்தில் பல பகுதிகளில் தொடர்ச்சியாக பெய்துவரும் மழை காரணமாக, ஆறுகள் நீரோடைகள் பெருக்கெடுத்துள்ளன.

நீரேந்தும் பிரதேசங்களில் அதிக மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதன் காரணமாக நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் உயர்ந்துள்ளன.

இதனால் மேல் கொத்மலை நீர்த்தேகத்தின் இரு வான்கதவுகளும், மஸ்கெலியா - மவுஸ்ஸாக்கலை நீர்த்தேக்கத்தின் மூன்று வான்கதவுகளும், கெனியோன் நீர்த்தேக்கத்தில் ஒரு வான் கதவும், லக்ஷபான நீர்த்தேக்கத்தின் இரு வான்கதவும் நேற்று (11) காலை திறக்கப்பட்டன.



காசல்ரீ நீர்த்தேக்க பகுதியில் இன்று காலை 50 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இதனால் காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. இதே வேளை நோர்ட்டன்பிரிட்ஜ் பகுதியில் அமைந்துள்ள விமல சுரேந்திர நீர்த்தேக்கப்பகுதியில் கடுமையான மழை பெய்கிறது .

### லிந்துலையில்

# மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்வு

பா.பாலேந்திரன்

லிந்துலை பொது சுகாதார பிரிவுக்கு உட்பட்ட ராணிவத்தை கிராம சேவகர் பிரிவு, இல்டன்னோல் கிராம சேவகர் பிரிவுகளை சேர்ந்த கர்ப்பிணி தாய்மார்களுக்கான மார்பக புற்று நோய் பற்றிய விழிப்புணர்வு செய்யப்பட்டது.

ராணிவத்தை கிராம சேவகர் பிரிவு குடும்ப நல உத்தியோகஸ்தர் நிர்மலா தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த அவர், அக்டோபர் மாதம் மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதமாகும். இது ஆண்டுதோறும் மார்பகப் புற்றைப் பற்றிய அறிவை மக்களுக்குப் புகட்டும் ஓர் பிரச்சார இயக்கம் ஆகும். மார்பகப் புற்று, பரவலாகக் காணப்படும் ஒரு புற்று நோய். இலங்கை உட்பட உலகம் முழுவதும் இந்நோய் ஒரு பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது.

கட்டுப்பாடற்ற உயிரணு வளர்ச்சியே இந்நோயின் தன்மை. மார்பகத்துக்குள் கட்டியாக உருவாகும் இது சிகிச்சை அளிக்கக் கூடிய ஒரு புற்று நோய் வடிவமாகும்.

# நிவாரணம் தருவதாகக் கூறி, நிர்வாணமாக்கும் பேரவலம்

துண்டுவிழும் தொகையென்பது வரவுக்கு மிஞ்சிய செலவாகும். ஒவ்வொரு குடும்பத்திலும் துண்டுவிழும் தொகை, நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அதைச் சமாளிப்பதற்கு பல வழிகளிலும் ‘குத்துக்கரணம்’ அடிக்க வேண்டிய நிலைமையே ஏற்பட்டுள்ளது.

பால்மா, சமையல் எரிவாயு (கேஸ்), கோதுமை மா, சீமெந்து ஆகியவற்றின் விலைகள் சடுதியாக அதிகரிக்கப்பட்டுள்ளமையால், அன்றாடம் கூலிவேலை செய்பவர்கள் மட்டுமன்றி, மாதச் சம்பளத்தில் ஜீவியம் நடத்துவோரும் திண்டாடிக்கொண்டிருக்கின்றனர்.

மேலே கூறப்பட்டுள்ள பொருட்களில் சீமெந்தைத் தவிர, ஏனைய பொருட்களின் விலை அதிகரிப்பால், மூவேளை உணவையும் வீட்டுக்கு வெளியே சாப்பிடுவோரின் நாளொன்றுக்கான செலவு பன்மடங்கில் அதிகரித்துள்ளது.

அதேபோல, பொருட்களின் தரமும் குறைந்துகொண்டே செல்கின்றது. ஒருவேளை உணவாக பால் தேநீரைப் பருகி, பசியாற்றிக்கொண்டவர்கள், வெறும் வயிற்றில் வரண்டு கிடக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையே ஏற்பட்டுள்ளது. அவ்வாறு இருக்கும் ஒருவரால், சாதாரண வேலைக்குக் கூட செல்லமுடியாத நிலைமையே ஏற்படும்.

முடக்கத்திலிருந்து வெளியே வந்துவிட்டோம். தொற்றுநோயால் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. சிலர் வேலையை இழந்துள்ளனர். இன்னும் சிலரின் கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டுள்ளன. அன்றாட வருமானத்துக்கே 24 மணிநேரமும் உழைக்கவேண்டியிருக்கிறது. இந்நிலையில், அதிகரிக்கப்பட்ட விலைகளால் ஏற்பட்டிருக்கும் இந்தப் புதிய சவாலில் இருந்து தப்பிக்க வழிதேட வேண்டும்.

மக்களைப் பட்டிணியில் துவள விட்டுவிட்டு, ஆட்சியில் குளிர்காயலாம் என நினைப்பதே முட்டாள்தனம். தீர்மானங்களை அமைச்சரவை எடுக்கவில்லை; வர்த்தகர்களே எடுக்கின்றனர். அதற்குக் கடிவாளம் போடுவதற்கு, அரசாங்கத்திடம் எவ்விதமான மாற்று வழிகளும் இல்லையென்பதையே விலை அதிகரிப்புகள் உணர்ந்தி நிற்கின்றன.

ஒரேயடியாகச் சுமத்தப்பட்டுள்ள சுமையைத் தாங்கிக்கொள்ள முடியாமல் பலரும் தடுமாறுகின்றனர். வாடகைக்கு குடியிருப்போரின் நிலைமையை நினைத்துக்கூட பார்க்கமுடியவில்லை. கேஸ் விலை அதிகரிப்பை அடுத்து, மாற்றீடாக விறகு அடுப்பைப் பயன்படுத்தலாம். அது, கிராமங்கள், தோட்டங்களில் சாத்தியப்படும். பெரும் நகரங்கள், அதனோடு இணைந்த பிரதேசங்களில் சாத்தியப்படாது. தேர்தல் காலங்களில் வாய்கிழிய நிவாரணங்கள் அள்ளிவீசியவர்கள், ஆட்சிப்பீடமேறியதன் பின்னர், மக்களை நிர்வாணமாக்கும் பேரவலத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்கின்றனர். அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை அதிகரிப்பதன் ஊடாகவே, பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்றால், அத்தீர்மானத்தை எடுப்பதற்கு அரசாங்கமும் அமைச்சரவையும் தேவையே இல்லை.

பொருள்களின் விலைகள் தலைக்குமேல் அதிகரித்துவிட்டால், சாதாரண குடும்பமொன்றின் தலைவன், செலவுகளைக் கட்டுப்படுத்துவான்; அல்லது, வீணான செலவுகளை தவிர்த்துக்கொள்வான். கால்நடையாகவே வீட்டுக்குச் சென்றுவிடுவான். அது, அந்த குடும்பத்தலைவனால் செலவுகளைக் குறைப்பதற்காக எடுக்கக்கூடிய ஆகக்கூடிய தீர்மானங்களில் ஒன்றாகும்.

அதேபோன்றதொரு தீர்மானத்தையே இந்த அரசாங்கமும் எடுக்கிறது. நிலைமை கட்டுக்கடங்காது சென்றுவிடுமாயின், தங்கள் மானத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காக, அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்துவிடுவர் என்பது மட்டுமே உண்மையாகும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

அகமும் புறமும் நல்ல நிலையில் எம்மோடு இணைந்திருந்தால், அகத்தில் இருக்கும் உயிர், சாந்தத்துடன் துலங்கி நிற்கும். அகம் என்பது உள்ளம்; வெளி என்பது, வெளிஉலகம். அத்துடன் அதனுடன் எமது தேகமும் இணைந்தது. இவை எல்லாமும் சுத்தமாகப் பரிணமித்தால், வாழ்க்கை சொர்க்கத்திலும் மேலானதாக அமையும். சுத்தம் என்றால் உடலைத் தூய்மையாக வைத்திருப்பது மட்டுமல்ல; பரந்த நெஞ்சத்துடன் வைத்துக் கொள்வதும் ஆகும். வெளிப்பார்வையில் கண்டு கொள்ளப்படாமல் இருக்கின்றது.

ஏனெனில், கெட்டவர்களில் பலர் நடிப்பில் கைதேர்ந்தவர்களாக இருக்கின்றார்கள். நன்றாகப் பேசுவார்கள்; அவர்களே பின்னர் குழி தோண்டுவார்கள். எதிர்காலம் எத்தகைய தண்டனைகளைத் தரப்போகின்றது என்பதைத் தெரியாமல் வாழும் கூட்டம் ஏராளம்.

சுழலும் வாழ்க்கை ஓட்டத்தில், இனிமையுடன் கூடிய நன்மைகளைச் சேர்த்திட, அடுத்தவர்கள் வாழ்க்கையில் சுபீட்சத்தை வழங்கிடுக.

மானிட நாகரிகம் கொடையால் மிளிர்கின்றது. எங்கள் சேவைகளை உலகம் கேட்கின்றது. கேட்பதற்கு முன்னர் உதவிகளை வழங்கிடுக!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

மாகாண சபை தேர்தலுக்கு

# முஸ்லிம் கட்சிகள் தயாரா?

மொஹமட் பாதுஷா

மாகாண சபைத் தேர்தல் பற்றிய கருத்தாடல்கள், மீண்டும் சூடுபிடித்திருக்கின்றன. ஆகக் குறைந்தது, இரு வருடங்களுக்கு முன்னராவது நடத்தியிருக்க வேண்டிய இத்தேர்தலை நடத்துவதற்கான முனைப்பை, அரசாங்கம் இப்போதுதான் வெளிக்காட்டத் தொடங்கியுள்ளது.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தமும் மாகாண சபை முறைமையும் இலங்கை - இந்திய உறவுடன் தொடர்புபடுகின்றன. இது விடயத்தில், புதுடெல்லி எப்போதும் விழிப்பாக இருக்கின்றது.

தமிழ் மக்களின் நன்மை கருதியே, இந்த விடயத்தில் இந்தியா உறுதியாக இருக்கின்றது என்று கூறப்பட்டாலும் கூட, அதையும் தாண்டிய பிராந்திய ஆதிக்கப் போட்டி, அரசியல், இராஜதந்திர நலன்களும் இதில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

இந்தப் பின்னணியில், கடந்த வாரம் கொழும்பு வந்த இந்திய வெளிவிவகாரச் செயலாளர், சீனாவின் கண்களை உறுத்தும்படி ஒரு ‘படம்’ காட்டிவிட்டு, புதுடெல்லியின் காட்டமான செய்தியையும் கொழும்புக்குச் சொல்லிவிட்டுப் போயிருக்கின்றார். அது என்னவென்றால், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, மாகாண சபைத் தேர்தல்களை உடன் நடத்த வேண்டும் என்று ஜனாதிபதியிடம் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில், 13ஆவது திருத்தத்தில் உள்ள நல்ல விடங்களையும் கண்டறிய வேண்டுமென்று கூறியுள்ள ஜனாதிபதி, மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்கு விரைவில் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

எனவே, மாகாண சபை தேர்தல் விரைவில் நடைபெறலாம் என்ற எதிர்பார்ப்பு, இப்போது சற்று அதிகரித்து இருக்கின்றது. இவ்வாறான சூழலில், அந்தத் தேர்தல்களை எதிர்கொள்வதற்கு முஸ்லிம் கட்சிகளும் முஸ்லிம் அரசியல்வாதிகளும் தயாராகி விட்டனரா என்ற கேள்வி எழுகின்றது.

நாட்டின், ஒன்பது மாகாண சபைகளின் ஆட்சிக்காலமும் முடிவுக்கு வந்து விட்டன. கிழக்கு, சப்ரகமுவ, வடமத்தி ஆகிய மாகாண சபைகளின் ஆட்சிக்காலம், 2017 இல் முடிவடைந்தது. வடக்கு, மத்திய மாகாணங்களின் ஆயுட்காலம், 2018 இல் நிறைவடைந்தது. ஆனால், மைத்திரி - ரணில் அரசாங்கம் தேர்தலொன்றுக்குச் செல்லவில்லை. அதற்கான முன்வேலைகளை மட்டுமே, கடைசிவரை செய்து கொண்டிருந்தது. அதன்பிறகு மேல்மாகாணம், ஊவா, தெற்கு ஆகிய மாகாணங்களின் ஆயுட்காலம், 2019 இல் நிறைவடைந்தது. ஆனால், இதுவரை இந்த அரசாங்கமும் தேர்தல் ஒன்றை நடத்தவில்லை.

பொதுவாகத் தேர்தல்களை நடத்துவதற்கு ராஜபக்ஷ அரசாங்கங்கள் பின்வாங்கியதில்லை. உரியகாலம் வருவதற்கு முன்னரே, தேர்தல்களை நடத்திய வரலாறும் அவர்களுக்கு இருக்கின்றது. ஆனால், நல்லாட்சி அரசாங்கத்தைப் போலவே, கோட்டாபய ராஜபக்ஷவின் இந்த அரசாங்கமும், மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில், மெத்தனப் போக்கை கடைப்பிடிக்கின்றது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவது என்றால், தேர்தல் முறைமையில் மாற்றம், எல்லை மறுசீரமைப்பு போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று, அரசாங்கத் தரப்பு தொடர்ச்சியாகக் கூறி வருகின்றது. அத்துடன், 2019 இற்குப் பின்னர் ஏற்பட்ட இரு பெரிய நெருக்கடிகளால், இப்பணிகள் தாமதமாகியமையும் நிதர்சனமானதே!

ஆனால், அதையும் தாண்டிய பின்புலக் காரணிகளும் இருக்கின்றன. இந்திய - இலங்கை ஒப்பந்தம், 13ஆவது திருத்தம், மாகாண சபை முறைமை என்பன, ஒன்றுக்கொன்று தொடர்புபட்டவை என்பதையும், 13ஆவது திருத்தத்தின் அடிப்படையான அதிகாரப் பகிர்வின் ஒரு சிறு வடிவமே, மாகாண சபைகள் என்பதையும் நாம் அறிவோம்.

ஆனால், இதுவரைகாலமும் 13 இல் குறித்துரைக்கப்பட்டபடியான முக்கிய அதிகாரங்கள், மத்தியில் இருந்து மாநிலத்துக்கு வழங்கவில்லை. இதன்மூலம், மாகாணங்களின் குறிப்பாக வடக்கு, கிழக்கின் ‘மூக்கணாங்கயிறை’ கொழும்பு தனது பிடிக்குள் வைத்திருந்தது.

இப்போது, நாட்டில் தேர்தலை நடத்துவதற்கான சூழல் இல்லை. கொவிட்-19 நெருக்கடிக்கு மத்தியில், பெரும் அரசியல், பொருளாதார பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன. அரசாங்கத்தின் மீது மக்கள் அதிருப்தியடையும் விதத்திலேயே, பொருட்களின் விலை அதிகரிப்பு முதலான அனைத்து விவகாரங்களிலும், அரசாங்கம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

சரி! அதையும் கடந்து பயணிக்கலாம் என்றாலும், ஒரு முக்கிய விடயம் பற்றி ஆட்சியாளர்கள் நிச்சயம் சிந்திப்பர். மாகாண சபை தேர்தலை நடத்தி, மாகாண சபைகளை மீண்டும் உயிர்ப்பித்தால், 13ஆவது திருத்த உள்ளடக்கங்களை (குறிப்பாக அதிகாரப் பகிர்வை) நடைமுறைப்படுத்துமாறு இந்தியா அழுத்தம் கொடுக்கலாம்.

ஆயினும், எந்தவகையிலும் அதிகாரப் பகிர்வுக் கோட்பாட்டை, ஓர் எல்லைக்கு அப்பால் எந்த அரசாங்கமும் ஏற்க மாட்டாது. ரணில், மைத்திரி, சஜித் என யார் ஆட்சிக்கு வந்தாலும், இதுதான் நிலைப்பாடாக இருக்கும். இவர்கள் வெளிப்படையாகச் சொல்வதை, அவர்கள் குறிப்பால் உணர்த்துவார்கள்; அதுதான் வித்தியாசம்.

ஆகவேதான், புதிய அரசியலமைப்பு ஒன்றைக் கொண்டு வருவதன் மூலம், ‘தமக்கு விரும்பிய’ ஏற்பாடுகளைச் செய்வதற்கு, ராஜபக்ஷ அரசாங்கம் சில முயற்சிகளை எடுத்தது. இன்னும் அம்முயற்சிகளைக் கைவிடவில்லை. ஆனால், இதனை உய்த்தறிந்து கொண்ட இந்தியா, அப்போது வெளிவிவகார அமைச்சரை உடனடியாக அனுப்பி, சொல்ல வேண்டியதைச் சொல்லியது.

இப்போது கடந்த வாரம், வெளிவிவகார அமைச்சின் செயலாளரை அனுப்பி, அதே விடயத்தை மீள வலியுறுத்தியுள்ளது. உண்மையில், ‘தமிழர்களுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுத்தல்’ என்ற நோக்கத்தை விடவும், சீனாவுக்கு எதிராக இலங்கையில் நாமும் செல்வாக்குச் செலுத்துகின்றோம் என்பதைக் குறிப்புணர்த்துவதற்கு இவ்விஜயம் பயன்படுத்தப்பட்டது என்றாலும், அரசாங்கத்தை பொறுத்தவரை, இந்தியாவின் வலியுறுத்தலைத் தட்டிக்கழிக்க முடியாது.

அதுமட்டுமன்றி, எதிர்க்கட்சிகளும் சிறுகட்சிகளும் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு, உரத்த குரலில் கேட்கத் தொடங்கியுள்ளன. எனவே, தேர்தலை நடத்துவதற்கான பாதையில், அரசாங்கம் பயணிக்க வேண்டிய நிர்ப்பந்தம் முன்னரை விட அதிகரித்துள்ளது. என்னதான் இந்தியாவுக்கு வாக்குறுதி அளித்தாலும், தேர்தல் முறைமை பற்றிய தீர்மானமொன்றுக்கு வரவேண்டியது, தேர்தலுக்கு முன்னரே செய்து முடிக்க வேண்டிய காரியமாகும். ஆகவே, இதுபோன்ற காரணங்களைச் சொல்லியே, அரசாங்கம் இன்னும் காலத்தை இழுத்தடிக்கலாம். அத்துடன், புதிய அரசியலமைப்பு வரைபு பணிகளை, கடுகதி வேகத்தில் செய்து முடிக்கவும் வாய்ப்புள்ளது. அதற்கான அறிகுறிகளும் தென்படாமல் இல்லை.

ஆனால், மிகக் கிட்டிய காலத்தில் மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றால், அதனை எதிர்கொள்வதற்கான வியூகங்களை முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் போன்ற முஸ்லிம் கட்சிகளும் ஏனைய அரசியல்வாதிகளும் இன்னும் வகுக்கவில்லை என்றே தோன்றுகின்றது.

இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணங்களில், இரண்டு மாகாணங்களின் ஆட்சியை மாத்திரமே சிறுபான்மையினர் கைப்பற்றக் கூடிய வாய்ப்பு உள்ளது. இதில் வட மாகாணத்தின் அதிகாரம் தமிழர்களைச் சென்றடையும். கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் அரசியல் அணிகள் ஒன்றுபட்டால், வெற்றி பெற முடியும். அல்லது, தமிழர்களுடனோ பெரும்பான்மைக் கட்சிகளுடனோ இணைந்து செயற்பட்டாலும் ஆட்சியதிகாரத்தில் செல்வாக்குச் செலுத்த முடியும்.

முஸ்லிம் அரசியல் அணிகள் எல்லாம் ஒன்றிணைந்து ஒரு குடையின் கீழ் போட்டியிட முடியுமாயின், தேர்தலில் வெற்றி பெற்ற உறுப்பினர்களின் அடிப்படையில், மறுதரப்புடன் பேரம்பேசலை மேற்கொண்டும், கிழக்கு மாகாண சபையில் தமது வகிபாகத்தை உறுதிப்படுத்தலாம்.

இவற்றுள் எந்தத் தெரிவை மேற்கொள்வது என்றாலும் நீண்டகாலத் திட்டமிடல் அவசியமாகும். அந்தவகையில், சற்றுக் காலம் கடந்தேனும் தேர்தல் முறைமை தொடர்பில் இரு பிரதான முஸ்லிம் கட்சிகளும் அக்கறை காட்டத் தொடங்கியுள்ளமை வரவேற்கத்தக்கது.

ஆனால், இது மட்டும் போதாது. சமூக நலனை மையமாகக் கொண்டு வியூகங்களும் புத்திசாதுரியமான நகர்வுகளும் அவசியமாகும். தமிழ் அரசியல்வாதிகளுடனோ, பெருந்தேசிய சிங்கள அரசியல்வாதிகளுடனோ யாருடன் கைகோர்ப்பது என்றாலும், அவர்கள் கடைசி மட்டும் முஸ்லிம் சமூகத்தின் நலன்களைக் காப்பவர்களாக இருக்க வேண்டும்.

அதுபோல, கடந்த காலத்தில் நிறுத்தப்பட்ட சில உருப்படியற்ற மாகாண சபை உறுப்பினர், முதலமைச்சர் வேட்பாளர்களைப் போல, ‘ஆள் எண்ணிக்கைக்கு’ வேட்பாளர்கள் நிறுத்தப்படாமல், ‘உருப்படியான’ வேட்பாளர்கள், இப்போதில் இருந்தே இனம் காணப்பட வேண்டும்.

சிங்கள அரசியல்வாதிகளும் தமிழ் அரசியல்வாதிகளும் முஸ்லிம் மக்களின் விடயங்களில் நல்லெண்ணத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் போல, முஸ்லிம் அரசியல்வாதிகளும் அவ்விதம் அவர்கள் விடயத்தில் செயற்பட வேண்டியுள்ளது.

அதுமட்டுமன்றி, பெருந்தேசியமும் தமிழ்த் தேசியமும் முஸ்லிம் சமூகத்தின் நலனில் அக்கறை செலுத்த வேண்டும் என்றால், முதலில் முஸ்லிம் அரசியல் தலைவர்களும் தமது சமூக நலனில் அக்கறை கொள்ளப் பழகிக் கொள்ள வேண்டியுள்ளது.

## கடிதங்கள்

### வெளியாரை வெளியேறுமாறு விவசாயிகள் கோரிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஜெயபுரம் பகுதியில், விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட வயல் காணிகளை, வெளியிடங்களைச் சேர்ந்த நபர்கள் அடாத்தாகப் பிடித்து, பயிர் செய்கை மேற்கொண்டு வருவதாகப் பாதிக்கப்பட்ட மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெயபுரத்தில் வசித்து வரும் குடும்பங்களுக்கு, 1983ஆம் ஆண்டு காலப்பகுதியில் வழங்கப்பட்ட வயற்காணிகள், வனவளத் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு இருந்த நிலையில், குறித்த காணிகள் பிரதேச செயலாளர் ஊடாக அண்மையில் விடுவிக்கப்பட்டு, ஜெயபுரம் பிரதேசத்தில் உள்ள 130 குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு, பயிர்செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில், பிரதேச செயலகம் ஊடாக தலா ஓர் ஏக்கர் வீதம் வழங்கப்பட்ட காணிகளில், 34 வரையான குடும்பங்களுக்கு சொந்தமான காணிகளை, வேறு பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகள் அத்துமீறி, அடாத்தாகப் பிடித்து பயிர்செய்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

நீண்ட இழுபறிக்குப் பின்னர், இந்தக் காணிகள் விடுவிக்கப்பட்டு விவசாயத்துக்காகப் பகிர்ந்தளிக்கப்பட்ட போதும், இவ்வாறு வேறு பிரதேசத்தைச் சேர்ந்த நபர்கள் காணிகளை ஆக்கிரமித்து உள்ளமை தொடர்பில், பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் நாச்சிக்குடா பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடுகள் பதிவு செய்துள்ளனர். இதேநேரம் குறித்த காணிகள் தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுத்து, தங்களுக்குரிய காணிகளைப் பெற்றுத்தருமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யது பாஸ்கரன்

சென்னை

வைகோ கட்சியில்

# கிளம்பியது புயல்


மக்கள் திராவிட முன்னே ற்ற கழக (மதிமுக) பொருளாளர் பதவியை, துரை வைகோவுக்கு வழங்க, கொங்கு மண்டல நிர்வாகிகள் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. ம.தி.மு.க., பொருளாளர் கணேசமூர்த்தி, லோக்சபா தேர்தலில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அவரது எம்.பி., பதவிக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு உள்ளது. பொருளாளர் பதவியை கணேசமூர்த்தி இராஜினாமா செய்ததால், அப்பதவி காலியாக உள்ளது. உடல் நலக்குறைவால் மறைந்த நாசரேத் துரை, துரை பாலகிருஷ்ணன் ஆகியோரின், துணை பொதுச் செயலர்



பதவிகளும் காலியாக உள்ளன. இந்நிலையில், ம.தி.மு.க., உயர்நிலைக்குழு, மாவட்ட செயலர்கள் கூட்டம், எதிர்வரும் 20ஆம் திகதி, சென்னை தாயகத்தில் நடைபெறுகிறது. அப்போது, காலியாக உள்ள பதவிகளுக்கான நியமனம் குறித்து ஆலோசனை நடக்க உள்ளது.காலியாக உள்ள மூன்று பதவிகளில், பொருளாளர் பதவியை வைகோ மகன் துரைக்கு வழங்க வேண்டும் என்று, அவரது ஆதரவு மாவட்ட செயலர்கள் வலியுறுத்துகின்றனர். ஆனால், கொங்கு மண்டல நிர்வாகிகள், தங்கள் மண்டலத்தை சேர்ந்தவருக்கு பொருளாளர் பதவியை வழங்க வேண்டும் என்று போர்க்கொடி தூக்கி உள்ளனர். மூத்த வழக்கறிஞர் ஒருவரும், கொங்கு மண்டலத்தை சேர்ந்த மூத்த மாநில நிர்வாகி ஒருவரும், துரைக்கு பதவி வழங்க பலத்த எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். இதனால், அக்கட்சியில் பிளவு ஏற்படுமோ என்ற கேள்வி எழுந்துள்ளது. ஆதரவும், எதிர்ப்பும்! துரை வைகோவுக்கு பதவி வழங்க ஆதரவும், எதிர்ப்பும் தெரிவித்து, சமூக வலை தளங்களில் கருத்துகள் வேகமாக பரவி வருகின்றன.

லக்னோ

# 'மாற்றம் கொண்டு வராமல் ஓயமாட்டேன்'



தற்போது பாரதிய ஜனதா கட்சி தலைவர்களும், அவர்களின் கோடீஸ்வர நண்பர்களும் தான் பாதுகாப்பாக இருக்கிறார்கள், மற்றவர்கள் யாரும் பாதுகாப்பாக இல்லை என்று காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி கடுமையாக விமர்சித்துள்ளார்.

லக்கிம்பூர் கெரி கலவரத்தில் கொல்லப்பட்ட 4 விவாயிகளுக்கு நீதி கிடைக்கக் கோரி கிசான் நியாய் பேரணியை காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி வாரணாசி நகரில் நடத்தினார். அங்கு நடந்த கூட்டத்தில் பிரியங்கா காந்தி பேசியதாவது:

'இன்று நவராத்ரியின் 4-வது நாள் நான் இன்று விரதம் இருக்கிறேன். மகாதேவி புகழ் பாடி இந்த கூட்டத்தைத் தொடங்குகிறேன். இந்த நவராத்திரி நேரத்தில் என் ஆழ் மனதில் இருந்து நாங்கள் உங்களிடம் பேசுகிறேன்.

இந்த தேசம் பிரதமரின் சொத்தும் அல்ல, அவர்களின் அமைச்சர்களின் சொத்தும் அல்ல. இந்த தேசம் உங்களுடையது. நீங்கள் விழிப்பாக இல்லாவிட்டால் உங்களின் சொந்த தேசத்தை உங்களால் காப்பாற்ற முடியாது, உங்களையும் காப்பாற்ற முடியாது. நீங்கள் தான் தேசத்தைக் கட்டமைத்தீர்கள் என்றார்.




மதுரை

# அதிமுக தோல்வியடைய, கட்சித் தலைவர்களே காரணம்

அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் (அதிமுக ) தோல்வியடைய, கட்சித் தலைவர்களே காரணம். அதேவேளை,கட்சித் தலைவர்களின் சில தவறான தேர்தல் வியூகங்களால் தான் எதிர்க் கட்சியாக இருக்கிறோம் என முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ தெரிவித்தார்.

அதிமுகவின் பொன்விழாவையொட்டி, அதற்கான விழா கொண்டாட்டம் குறித்து அக்கட்சி தலைவர்கள், நிர்வாகிகள் ஆலோசிக்கின்றனர். மதுரை மாநகர் மாவட்ட அதிமுக சார்பில், பொன்விழாவை குறித்த ஆலோசனை கூட்டம் காமராஜர் சாலையிலுள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடந்தது. மாநகர மாவட்ட செயலர் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே. ராஜூ எம்எல்ஏ உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் பேசியதாவது: எம் ஜி ஆர் ரசிகன் அமைச்சராக இருந்தேன் என்பதில் பெருமைப்படுகிறேன். உயிர் மூச்சு உள்ளவரை கட்சிக்காக உழைப்பேன். அதிமுக கரை வேட்டியே சாகும் போதும் கூட உடலில் இருக்கும். அதிமுக ஆளுங்கட்சியாக, எதிர்க்கட்சியாக இருந்தாலும் ஒன்று தான். நான் காரை விட்டு இறங்கினால் சாதாரண தொண்டன்.

மக்கள், தொண்டர்களின் அன்பு, ஆசை யால் பத்தாண்டு அமைச்சராக இருந்தேன். என்றுமே எனது நிலையை மாற்றிக்கொண்டதில்லை. கூட்டுறவுத் துறையில் பல தவறுகளைக் களைந்து மேம்படுத்த சிந்தித்து செயல்பட்டேன்.இவ்வாறு முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ தெரிவித்தார்.

சென்னை

# அ.தி.மு.க.வில் அதிரடி மாற்றங்கள்



அண்ணா திராவிட முன்னேற்ற கழக (அதிமுக) அவைத் தலைவராக இருந்த மதுசூதனன் மறைந்த பிறகு இதுவரை புதிய அவைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

இந்த சூழ்நிலையில் புதிய அவைத் தலைவர் தேர்வு மற்றும் கட்சியின் பொன்விழா தொடர்பாக கட்சியின் முக்கிய நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் ராயப்பேட்டையில் உள்ள தலைமை கழகத்தில் நேற்று நடைபெற்றது. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் தலைமை தாங்கினார்கள்.

கூட்டத்தில் தமிழ்மகன் ஹுசைன், பொன்னையன், டி.ஜெயக்குமார், பா.வளர்மதி, கே.பி.முனுசாமி, திண்டுக்கல் சீனிவாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர். அவைத்தலைவரை பொறுத்தவரை கட்சியின் மிக மூத்த நிர்வாகிகளை நியமிப்பதே வழக்கம்.

அதன்படி தமிழ்மகன் ஹுசைன், பொன்னையன் ஆகியோர் மிக மூத்த நிர்வாகிகளாக உள்ளார்கள். இவர்களில் பொன்னையன் அவைத்தலைவர் பதவியை விரும்பவில்லை என்று கூறப்படுகிறது. தமிழ்மகன் ஹுசைன் இந்த பதவிக்கு முயற்சிப்பதாக கூறப்படுகிறது.

மகாராஷ்டிரா

விவசாயிகள் உயிரிழப்பு

# மகாராஷ்டிராவில் போராட்டம்

உத்தர பிரதேச மாநிலம் லக்கிம்பூரில் நடந்த வன்முறையில் நான்கு விவசாயிகள் உட்பட 9 பேர் உயிரிழந்தனர். இதில் இரண்டு விவசாயிகள் கார் ஏற்றி கொல்லப்பட்டனர். இதற்கு இந்தியா முழுவதிலும் இருந்து கண்டனக் குரல் எழுப்பப்பட்டன.

மகாராஷ்டிரா மாநிலத்தில் காங்கிரஸ், சிவசேனா, தேசியவாத காங்கிரஸ் ஆகிய மூன்று கட்சிகளும் இணைந்து ஆட்சி செய்து வருகின்றன. இந்த கட்சிகள் லக்கிம்பூர் வன்முறைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் போராட்டம் நடத்த முடிவு செய்தன.

அதன்படிநேற்று மகாராஷ்டிரா மாநிலத்தில் கடை அடைப்பு போராட்டம் (பந்த்) நடைபெற்று வருகிறது. ஆளுங்கட்சி பந்த் என்பதால் பெரும்பாலான கடைகள் அடைக்கப்பட்டிருந்தன.

புனே பகுதியில் உள்ள ஏ.பி.எம்.சி. மார்கெட் அடைக்கப்பட்டிருந்தது. மார்கெட் வணிகர்கள் கடைகளை அடைக்க முடிவு செய்தனர். இதுகுறித்து முன்னதாகவே விவசாயிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது என்று மார்கெட் நிர்வாகி தெரிவித்தார்.மும்பையில் சில இடங்களில் அரசாங்க பஸ் மீது கல் வீச்சு சம்பவம் இடம்பெற்றுள்ளது.





# சின்னத்திரையில் சமந்தா

காதல் திருமணம் செய்து கொண்ட நடிகை சமந்தாவும், நாக சைதன்யாவும் விவாகரத்து செய்து பிரிவதாக அண்மையில் அறிவித்தனர். இது தென்னிந்திய திரையுலகினரிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்த நிலையில், விவாகரத்து அறிவிப்பை வெளியிட்ட பின் தற்போது முதன்முறையாக சின்னத்திரை நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டுள்ளார் சமந்தா.

தெலுங்கில் முன்னணி நடிகராக இருக்கும் ஜூனியர் என்.டி.ஆர், நடத்தி வரும் 'உங்களில் யார் கோடீஸ்வரர்' நிகழ்ச்சியில் நடிகை சமந்தா சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் அவர் 25 இலட்சம் ரூபாய் வென்றதாக கூறப்படுவதுடன், இந்நிகழ்ச்சி வருகிற 14ஆம் திகதி ஒளிபரப்பாக உள்ளது.

# கதை திருட்டு சூர்யா அதிரடி



தமிழ் திரையுலகில் முன்னணி நடிகராக இருக்கும் சூர்யா தயாரிப்பில் உருவான திரைப்படம்தான் 'இராமே ஆண்டாலும் இராவணே ஆண்டாலும்'.

கடந்த மாதம் நேரடியாக ஓடிடி-யில் வெளியான இத்திரைப்படம் விமர்சன ரீதியாக நல்ல வரவேற்பை பெற்றது. புதுமுக இயக்குநர் அரிசில் மூர்த்தி இயக்கி இருந்தார்.

இந்த நிலையில், அண்மையில் கதை திருட்டு சர்ச்சையில் இந்தத் திரைப்படம் சிக்கியது. கடந்த 2016ஆம் ஆண்டு மராத்தி மொழியில் வெளியான 'ரங்கா படாங்கா' திரைப்படத்தின் கதையை தழுவி தான் 'இராமே ஆண்டாலும் இராவணே ஆண்டாலும்'திரைப்படம் எடுக்கப்பட்டது தெரியவந்தது.

இந்த விடயம் சூர்யா கவனத்துக்குகு சென்றதும், அவர் இயக்குநரை அழைத்து விசாரித்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து சம்மந்தப்பட்ட மராத்தி திரைப்படத்தின் குழுவினரை அழைத்து அவர்களுக்கு உரிய தொகையை நஷ்ட ஈடாக கொடுத்து இருக்கிறார் சூர்யா.



# மனம் திறந்த ராஷி

நயன்தாராவுடன் "இமைக்கா நொடிகள்" திரைப்படத்தில் நடித்து அறிமுகமானவர் ராஷிகன்னா, "அடங்க மறு, அயோக்யா, சங்கத்தமிழன், துக்ளக் தர்பார்" ஆகிய திரைப்படங்களிலும் நடித்துள்ளார்.

அண்மையில், ராஷிகன்னா இணையதளத்தில் ரசிகர்கள் கேள்விகளுக்கு பதில் அளித்த போது, ''எனக்கு ஆண் நண்பர் இல்லை. இதுவரை யாரையும் காதலிக்கவில்லை. எனது வாழ்க்கை துணைவரை கண்டுபிடிக்கும்போது எல்லோருக்கும் சொல்வேன்" என்று கூறினார்.

அத்துடன், "எனக்கு வரப்போகிற கணவர் அழகாக இருக்கிறாரோ இல்லையோ ஆன்மிகத்தில் ஈடுபாடு உள்ளவராக இருக்க வேண்டும். ஆன்மிகத்தில் நம்பிக்கை உள்ளவரைத்தான் திருமணம் செய்து கொள்வேன்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம், "தமிழில் விஜய் எனக்கு பிடித்த நடிகர், தெலுங்கில் ஜூனியர் என். டி.ஆர்., அல்லு அர்ஜுன், மகேஷ்பாபு ஆகியோரை பிடிக்கும். அல்லு அர்ஜுனுடன் சேர்ந்து நடனம் ஆட விருப்பம் உள்ளது. கதாநாயகிகளில் நயன்தாரா, சமந்தா, அனுஷ்கா ஆகியோர் மிகவும் பிடித்தவர்கள். இப்போது தெலுங்கை விட அதிக தமிழ் திரைப்படங்கள் கைவசம் வைத்து நடிக்கிறேன்" என்றார்.

# த்ரிஷாவின் அசத்தல் அப்டேட்



கல்கியின் சரித்திர நாவலான 'பொன்னியின் செல்வன்' அதே பெயரில் திரைப்படமாக எடுக்கப்பட்டுள்ளது. மணிரத்னம் இயக்கியுள்ள இத்திரைப்படம் 2 பாகங்களாக தயாராகி உள்ளது.


விக்ரம், கார்த்தி, ஐஸ்வர்யா ராய், திரிஷா, ஜெயம் ரவி, விக்ரம் பிரபு, பிரபு என மிகப்பெரிய நட்சத்திர பட்டாளமே நடித்துள்ளது.

ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கும் இத்திரைப்படத்துக்கு ரவி வர்மன் ஒளிப்பதிவு செய்துள்ளார். விறுவிறுப்பாக நடைபெற்று வந்த படப்பிடிப்பு கடந்த மாதம் நிறைவடைந்தது.

இந்தநிலையில், "பொன்னியின் செல்வன்" திரைப்படத்தின் முக்கிய அப்டேட்டை நடிகை த்ரிஷா வெளியிட்டுள்ளார். அதன்படி டப்பிங் பணிகள் தொடங்கி உள்ளதாகவும், தற்போது அவர் டப்பிங் பேசி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் டப்பிங் ஸ்டூடியோவில் எடுத்த புகைப்படம் ஒன்றையும் அவர் தனது சமூக வலைதள பக்கத்தில் பகிர்ந்துள்ளார். "மங்காத்தா, மன்மதம் அம்பு" உள்ளிட்ட சில திரைப்படங்களில் மட்டுமே நடிகை திரிஷா சொந்த குரலில் டப்பிங் பேசி இருந்தார்.

நீண்ட இடைவெளிக்கு பிறகு தற்போது பொன்னியின் செல்வன் திரைப்படத்துக்காக சொந்த குரலில் டப்பிங் பேசி வருகிறார் த்ரிஷா.



பிரித்தானியா

# Bar-க்குச் செல்ல சுரங்கம் அமைத்த அரச குடும்பம்

பிரித்தானியாவின் மகாராணி இரண்டாம் எலிசபெதின் அரண்மனையிலிருந்து, பார் ஒன்றிற்குச் செல்வதற்காக ரகசிய சுரங்கப்பாதை ஒன்று அமைக்கப்பட்டிருந்ததாக பிரபல ஊடகமான டெய்லி மெயிலின் (Daily Mail) ஆசிரியர் வெளியிட்டுள்ள செய்திகள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது, "மகாராணியாரின் பேத்தியான, Eugenie இளவரசியின் கணவர், Jack Brooksbank ஐ அண்மையில் சந்தித்தேன்.

அப்போது, மகாராணியார் லண்டனில் இருக்கும் பிரபல பார் ஒன்றுக்குச் செல்வதற்காக




ரகசிய சுரங்கப்பாதை ஒன்றை வைத்திருந்தார். தற்போது வரை அதனை நான் பயன்படுத்தியது இல்லை. ஒரு தடவையாவது அதன் மூலம் பாருக்குச் செல்ல விரும்புவதாகவும் என்னிடம் கூறினார்" என்றார்.

இந்நிலையில் அரச குடும்பத்தின் ரகசியத்தை வெளியில் தெரியப்படுத்தியமைக்காக ஐக்கை பலரும் விமர்சித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பின்லாந்து

## கர்ப்பம் தெரியாது குழந்தை பெற்ற பெண்



இளம்பெண் ஒருவர் தான் கர்ப்பமாக இருப்பதை அறியாமலேயே குழந்தையொன்றை பிரசவித்த சம்பவம் பின்லாந்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

பின்லாந்தில் வசிக்கும் டில்டா கண்டலா என்ற 2 வயதான குழந்தையின் தாயே இவ்வாறு குழந்தையைப் பிரசவித்துள்ளார்.

சம்பவதினத்தன்று டில்டாவிற்கு கடுமையான வயிற்று வலி ஏற்பட்டுள்ளது. எனினும் இரவு உட்கொண்ட உணவு ஒவ்வாமையை ஏற்படுத்தியிருக்கும் என்று அவர் எண்ணியுள்ளார்.

எவ்வாறு இருப்பினும் அடுத்த சில நிமிடங்களில் டில்டாவிற்கு அழகான ஆண் குழந்தையொன்று பிறந்துள்ளது. இது தொடர்பில் டில்டா தெரிவித்துள்ளதாவது, "நான் கர்ப்பமடைந்திருப்பது, சத்தியமாக எனக்கு தெரியவில்லை. வயிற்று வலி அதிகம் இருந்த போது உணவு சரியில்லை என்று தான் எண்ணினேன்.

ஆனால் இரு வருடங்களுக்கு முன், என் மகள் பிறந்தபோது ஏற்பட்ட பிரசவ வலி போன்று இந்த வலியை உணர்ந்தேன். நான் அவதிப்படுவதை பார்த்த என் அம்மா, கர்ப்பமடைந்திருக்கிறாயா? என்று என்னிடம் கேட்டார். நான், தெரியவில்லை என்று கூறினேன். சில நிமிடங்களில் அழகான ஆண் குழந்தை பிறந்தது, என்னை குழப்பத்தில் ஆழ்த்தியது. அதன்பின்பு,அம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன்.

இப்பொழுது நானும், குழந்தையும் நன்றாக இருக்கிறோம்" என்று தெரிவித்தார்.



பின்லாந்து

## சிகிச்சையால் சிக்கிய விசித்திரப் பொருள்

நெஞ்சு வலி காரணமாக மருத்துவமனைக்குச் சென்ற 56 வயதான நபரின் இதயத்தை சோதனை செய்து பார்த்த மருத்துவர்கள் அவரின் இதயத்திற்கு அருகில் விசித்திரமான பொருள் ஒன்று சிக்கியிருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இந்நிலையில் பலகட்ட பரிசோதனைக்குப் பின்னர் குறித்த பொருளானது சீமெந்துக் கல் எனவும் இதனால் அவரது இதயத்தில் ஒரு துளை ஏற்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து குறித்த நபர் வழங்கிய தகவலின் அடிப்படையில் "சில வருடங்களுக்கு முன்பு அவருக்குச் செய்யப்பட்ட கைபோபிளாஸ்டி சிகிச்சையில், முதுகெலும்பில் ஒரு சிறப்பு வகை சிமெந்து வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

மேலும் இக் கூர்மையான துண்டே நரம்புகள் வழியாகச் சென்று அந்நபரின் இதயச் சுவரில் துளையினை ஏற்படுத்தியுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் ஒரு சிக்கலான அறுவை சிகிச்சைக்குப் பின்னர் இதயத்தில் இருந்து அக் கல் அகற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பொஸ்னியா

## மனைவிக்காக வீட்டை சுழல வைத்த கணவர்



நபரொருவர் தனது மனைவியின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் வீட்டைச் சுழல வைத்த சம்பவம் பொஸ்னியாவில் இடம்பெற்றுள்ளது.

சர்பக் நகரைச் சேர்ந்த வொஜின் குசிக் என்ற 72 வயதான நபரே இவ்வாறு, தனது மனைவி ஜபிகாவின் நீண்ட நாள் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் நவீன தொழில் நுட்பத்தைக் கொண்டு வீட்டை முழுவட்ட வடிவில் சுழலும் வகையில் வடிவமைத்துள்ளார். அந்தவகையில் குறித்த வீட்டை புவியிர்ப்பு விசைக்கு ஏற்ப 24 மணி நேரத்திற்கு ஒருமுறையும், அதேநேரம் அதிகவேகமாக 22 செக்கன்களுக்கு ஒரு முறை சுழலும் வகையிலும் அவர் வடிவமைத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



பிரான்ஸ்

## வேலை தேடி வருபவர்களுக்கு 1,000 யூரோ



வேலை தேடி வருபவர்களுக்கு ஊக்கத்தொகையாக ஆயிரம் யூரோ வழங்கப்படும் என்று பிரான்ஸ் தொழில்துறை அமைச்சர் எலிசபெத் போர்ன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: "நெடுங்காலமாக வேலை தேடிக்கொண்டு இருப்பவர்கள் Ple Emploiவில் பதிவு செய்திருந்தால், அவர்கள் தேடிய வேலை தொடர்பான பயிற்சி அளிக்கப்படும்.

மேலும் அந்த நிறுவனங்களில் முழு ஈடுபாட்டுடன் இருப்பவர்களை ஊக்குவிப்பதற்காக ஆயிரம் யூரோ வழங்கப்படும்" என்று அறிவித்துள்ளார்.

### ஐ.பி.எல்: டெல்லியை வென்று

# இறுதிப் போட்டியில் சென்னை



இந்தியன் பிறீமியர் லீக்கின் இறுதிப் போட்டிக்கு சென்னை சுப்பர் கிங்ஸ் தகுதி பெற்றுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாயில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற டெல்லி கப்பிட்டல்ஸுடனான முதலாவது தகுதிகாண் போட்டியில் வென்றதன் மூலமே இறுதிப் போட்டிக்கு சென்னை தகுதி பெற்றிருந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: சென்னை

டெல்லி: 172/5 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: பிறறித்திவி ஷா 60 (34), றிஷப் பண்ட் ஆ.இ 51 (35), ஷிம்ரோன் ஹெட்மயர் 37 (24) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜொஷ் ஹேசில்வூட் 2/29 [4], மொயின் அலி 1/27 [4], இரவீந்திர ஜடேஜா 1/23 [3])

சென்னை: 173/6 (19.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: ருத்துராஜ் கைகவாட் 70 (50), றொபின் உத்தப்பா 63 (44), மகேந்திர சிங் டோணி ஆ.இ 18 (06) ஓட்டங்கள். பந்துவீச்சு: டொம் கர்ரன் 3/39 [3.4], அன்றிச் நொர்ட்ஜே 1/31 [4], ககிஸோ றபாடா 0/23 [3], அக்ஸர் பட்டேல் 0/23 [3])

போட்டியின் நாயகன்: ருத்துராஜ் கைகவாட்

### தேசங்களுக்கான லீக் தொடர்

## ஸ்பெய்னை வென்று சம்பியனான பிரான்ஸ்




ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் தேசங்களுக்கான லீக் தொடரில் பிரான்ஸ் சம்பியனானது.

இத்தாலியில் நேற்று அதிகாலை நடைபெற்ற ஸ்பெய்னுடனான இறுதிப் போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் வென்றே பிரான்ஸ் சம்பியனாயிருந்தது.

பிரான்ஸ் சார்பாக, கரிம் பென்ஸீமா, கிலியான் மப்பே ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, ஸ்பெய்ன் சார்பாகப் பெறப்பட்ட கோலை மிகேல் ஒயர்ஸ்பல் பெற்றிருந்தார்.

இதேவேளை, பெல்ஜியத்தை 2-1 என்ற கோல் கணக்கில் வென்ற இத்தாலி மூன்றாமிடத்தைப் பெற்றிருந்தது. இத்தாலி சார்பாக, நிக்கொலோ பரெல்லா, டொமெனிக்கோ பெரார்டி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, பெல்ஜியம் சார்பாகப் பெறப்பட்ட கோலை சார்ள்ஸ் டி கெடெலரே பெற்றிருந்தார்.



### தெற்காசிய கால்பந்தாட்ட சம்மேளன சம்பியன்ஷிப்

## வெளியேறிய இலங்கை

மாலைதீவுகளில் இடம்பெற்றுவரும் தெற்காசிய கால்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடரிலிருந்து இலங்கை வெளியேற்றப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற மாலைதீவுகளுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தமையைத் தொடர்ந்தே தொடரிலிருந்து இலங்கை வெளியேற்றப்பட்டுள்ளது.

முன்னதாக, பங்களாதேஷ், நேபாளத்துடன் தோல்வியுற்றிருந்த இலங்கை, இந்தியாவுடனான போட்டியை சமப்படுத்திருந்தது.

### உலகக் கிண்ணத்துக்கான

## இலங்கை குழாமில் அகில, குமார



இம்மாதம் ஆரம்பமாகவுள்ள சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு 20 உலகக் கிண்ணத் தொடருக்கான இலங்கை குழாமில், அகில தனஞ்சய, லஹிரு குமார, பினுர பெர்ணான்டோ, பதும் நிஸங்க ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

காயமடைந்த லஹிரு மதுஷங்க, நுவான் பிரதீப் மற்றும் பிரவீன் ஜெயவிக்கிரம, கமிந்து மென்டிஸையே இவர்கள் குழாமில் பிரதியிட்டுள்ளனர்.

இந்நிலையில், குழாமில் மேலதிகமாக இணைத்துக் கொள்ளப்பட்ட மினோத் பானுக, லக்ஷன் சந்தகான், ரமேஷ் மென்டிஸ், அஷேன் பண்டார ஆகியோரும் குழாமில் இறுதியாக இடம்பெறவில்லை.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 12 ஒக்டோபர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.